முரசொலி

வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி. 2 அணு

முரசு 2 | சென்னை | 30-9-55 | வெள்ளி | ஒலி 27

ஆரூர் மும்மூர்த்திகள்

மு. கருணாநிதி

படுக்கையில் புரண்டு கொண்டேயிருந்தேன். தூக்கம் வரவில்லை. ஒரே குழப்பம்- ஓயாத மனப் புயல்! எதிர் பாராத செய்திகள்— எங்கெங்கிருந்தோ கணைகள் — இதய அலைகள் குமுறி அடித்துக் கொண்டிருந்தன! கண்ணை மூடிக் கொண்டே, "தூக்கம்— தூக்கம்" என்று ஒரே நினைவோடு இருந்து பார்த்தேன். குழப்பக்காரியின் கொண்டாட்டமும், குதூகலமும் ஓய்ந்த பாடில்லை. கொந்தளிக்கும் நடுக்கடலிலே கோரப் புயலின் இடையிலே பாய்மரம் முறிந்து, சுக்கான் உடைந்து, நங்கூரம் நொறுங்கிவிட்ட தோணிபோல என் உள்ளம் ஊசலாடிக் கொண்டிருந்தது. காரணம் என்ன ? எல்லாம் திருவாரூர் செய்தியால் ஏற்பட்ட கலக்கம் தான்! அப்படியென்ன அங்கிருந்து திடுக்கிடும் செய்தி வந்து விட்டது ? சென்ற ஆண்டு காங்கிரசை எதிர்த்து நின்று மக்களிடம் வாக்குப் பெற்ற நகரசபைத் தலைவர், இந்த ஆண்டு புதிய காங்கிரஸ் காரராக மாறிபோட்டியிடுகிருரே; அந்தச் செய்தியால் சிந்தை கலங்கிற்ருே எனக் கேட்கலாம்! இல்லை, இல்லை-இதைத்தான் மாணிக்கவேலர், ராஜா சிதம்பரம் உருவங்களிலே கண்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டிருக்கிருேமே! தூக்கத்தைக் கெடுத்த துன்பம் அது வல்ல. பின் எது ?

மும் மூர்த்திகள் என் தூக்கத்தைக் கெடுத்து விட்டார்கள். என்னப்பா உளறுகிருய்? மும்மூர்த்திகளாவது- உன் உறக்கத்தைக் கெடுப்பதாவது— என்று நீஙகள் கேட்கிறீர்கள். அது என்

காதில் விழுகிறது. என்னைப் போல நீங்களும் ஒரு கனவு கண்டிருந்தால் இப்படிக் கேட்கமாட்டீர்கள்! 'தூக்கமே வரவில்லை என்ருய்— பிறகு கனவு கண்டதாகச் சொல்லுகிருயே; இது எப்படி?' என்பீர்கள். இரவு முழுவதும் தூங்காமலே இருந்து விட்டேன என்று நான கூற வில்லையே — தூங்கினேன் — ஆமாம்; இமைகள் தாளுகவே களைத்துப்போய் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு மயங்கி விழுந்தன. விழி தேவையில்லாத விசித்திர உலகத்திற்கு ஓடினேன், கால்களை உபயோகிக்காமல்! ஆம், கனவு லோகந்தான் அது!

எங்கிருந்தோ இசை வந்து கொண்டிருந்தது. இசை வந்த திசையில் நடந்தேன்.

"நிரவதி சுகதா......"

அர்த்தம் தெரியாத அந்தப் பாடலைக் கேட்டுக் கொண்டே ஒதுங்கி நின்றேன். பாடல் முடிந்தது. இருவர் கைதட்டி 'சபாஷ்; சபாஷ்' என்று கூவினுர்கள். பாடியதும் ஆண்தான்-ரசித்தவர்களும் ஆண்கள்தான்! மூவரையும யாரென்று உற்றுப் பார்த்தேன். தியாகராஜர்—சாமா சாஸ்திரி - தீட்சிதர் – மூவரும் ஏதோ பேச ஆரம்பித்தார்கள்- கவனமாகக் கேட்டேன்.

தீட்சிதர் : அய்யர்வாள், தெரியுமோ சேதி- 'திருவாரூரிலே ஒரே புரட்சியான்னு இருக்கு!

தியாகர்: என்னங்காணும் தீட்சிதரே-என்ன வெடிகுண்டு போடுசிறீர் ? திருவாரூரிலாவது; புரட்சி ஏற்படவாவது?

தீட் : அதென்ன அப்படி சொல்லிட்டீர்! சாமா சாஸ்திரி கனை கேட்டுப் பாருமே! இடிந்து போன மூன்று கிரகங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்குதுங்காணும்!

தியா : புரியும்படிச் சொல்லுமே- ஓ சாஸ்திரி! தீட்சதர் என்ன உளர்ரார்!

சாமா : உளர்ராரா? சரியாப் போச்சு! இப்ப, நம்ப மூணு பேர்ல பரமசிவன் யாரு? மகா விஷ்ணு யாரு? பிர்மா யாருன்னு நாமே நிச்சயப்படுந்திட வேணும் அய்யர்வாள்!

தியா : என்னய்யா, நீரும் குழப்பிண்டே போறீர் ?

சாமா: நானு குழப்புறேன்? அங்கே சேறு குழப்ப ஆரம்பிச்சுட்டா.

தியா: எதுக்காக சாஸ்திரி வாள் ?

சாமா : மும்மூர்த்திகளுக்கு கோயில் பிரதிஷ்டை பண்ண!

தியா: சரி தான் போம்! திருவாரூர் க்ஷேத்திரத்திலே மும்மூர்த்திகளுக்குக் கோயில் இல்லாம இப்பத்தான் புதிசா கட்டப் போருளோ ?

தீட்: மும்மூர்த்திகளு நீர் கடவுளை நினைச்சுண்டு இருக்கீர்! அதான

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

'சீரழிவுக் கமிஷன்' சிபார்சுகள்!

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் 'தட்சிணப் பிரதேசம்' போன்ற திடுக்கிடும் யோசனைகளைவழங்கி, எப்படி பிறமொழிப் பிராந்தியங்களின் சீரழிவுக்கு வித்திடுகிறது என்பதை சென்ற வார அரசியல் நிகழ்ச்சிகள் நமக்குச் சுட்டிக்காட்டி யிருக்கின்றன. அதே பாணியில் நாம் அமைத்த 'ராஜ்ய சீரழிவு'க் (கற்பனைக்)கமிஷன் வழங்கிய சிபார்சுகளைக் கீழே தருகிறோம்.

தவளைகள் வளர்ச்சியை ஆராய்வதற்கு பாம்புகளைக் கொண்ட கமிட்டி அமைப்பது போல; கிளிகளின் பாதுகாப்புக்கு பூனையிடம் ஆலோசனை கேட்பதுபோல; மொழிவாரியாக எங்ஙனம் இந்தியாவைப் பிரிக்கமுடியும் என்று அறிவுரைகள் வழங்க எங்களை இந்தக் கமிஷனில் நியமித்தமைக்கு இந்திய அரசினருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியா என்னும் இந்த நிலப்பரப்பு எந்தக் காலத்திலும் ஒரு குடைக்கீழ் இருந்ததில்லை—வெள்ளையன் நிர்வாகத்தில் தவிர! வம்பு செய்யும் வங்கம்; கட்டுப்படேன் என்று [illegible]வும் கலிங்கம்; மிரளும் மராட்டியம்; தலைதனியாத் தக்கணம்; இரண பேரிகை கொட்டும் ராஜபுதனம்—இப்படித்தான் இந்திய சரித்திரத்திலே படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. இருந்தால் என்ன? இனிமேலாவது இந்தியா ஒன்றாக இருக்கக்கூடாதா என்று யார் சொன்னது?

எனவேதான் இந்தியாவை அரசியல்; பொருளாதார; கலாச்சார ரீதியாக ஒன்றுபடுத்தி, அதை பலமிக்க ஏகாதிபத்திய வரிசையில் சேர்த்து, ஐ.நா. சபையைக் கைப்பற்றுவதற்காக நாங்கள் கீழ்க்கண்ட யோசனைகளை வழங்குகிறோம்.

நமது சகோதர ராஜ்ய சீரமைப்புக் கமிட்டியார் மைசூர், திரு-கொச்சி, சென்னை ஆகிய மூன்று மாகாணங்களை ஒன்று சேர்த்து 'தட்சிணப் பிரதேசம்' என்று அமைக்கலாமா என்று யோசிப்பதாகக் கேள்விப்பட்டோம். இந்த யோசனையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருக்கிறோம். அதோடு கீழ்க்கண்ட புதிய மாகாண அமைப்பை சிபார்சு செய்கிறோம்.

அதன்படி மலையாளம், மைசூர், சென்னை, சிலோன், அந்தமான் தீவுகள் ஆகிய [illegible]த்தையும் சேர்த்து "இந்து மகா சமுத்திரப் பிரதேசம்" என்னும் பெரிய மாகாணத்தை அமைக்கவேண்டும். சிலோன் இந்த ஐக்கிய முயற்சிக்கு சம்மதிக்காவிட்டால், இன்னொரு பாண்டுங் மாநாடு கூட்டி அதில் இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும்.

சென்னை மாகாணம் மேற்கண்ட 'இந்துமகா சமுத்திரப் பிரதேச'த்தோடு சேர்க்கப்பட்டுவிடுகிறபடியால், சென்னை நகரத்திலுள்ள மைலாப்பூர் பிராந்திபத்தையும், இமயமலை மீதுள்ள எவரெஸ்ட் பிராந்தியத்தையும் விசால ஆந்திரத்துடன் சேர்த்துவிடவேண்டும்.

உத்தர பிரதேசம் இந்திய அரசியலில் ஒரு முக்கிய பிராந்தியமாக இருந்து வருகிறது. நேரு வாழ்ந்த அலகாபாத் நகரம் உத்தரப் பிரதேசத்தில் தானே இருக்கிறது! போலீஸ் மந்திரி பந்த் பிறந்த புண்ணிய பூமியும் அதுதானே! எனவே உத்தரப் பிரதேசத்தை விரிவு செய்து 'மகா உத்தரப் பிரதேசத்தை' சிருஷ்டிக்க வேண்டும். அப்படி அமைக்கப்பட்ட பிரதேசத்தில் உ. பியின் அரசியற் பெருமை காரணமாக அதோடு டெல்லி பார்லிமென்டை மட்டும் இணைத்துவிட வேண்டும்.

பார்லிமென்ட் தவிர்த்த எஞ்சிய டெல்லியை பம்பாய் மாகாணத்துடன் இணைக்க வேண்டும்.

—இப்போதே மூன்று நான்கு பிரிவுகள் செய்துவிட்டோம். இதுவே அதிகம். எனவே மீதமுள்ள மாகாணங்களை எப்படி உருவாக்குவது என்பதை நேருவின் யோசனைக்கே விட்டுவிடுகிறோம்.

—இப்படியாக ஏக இந்தியாவின் அரசியல் ஒற்றுமை பாதுகாக்கப்படும் என்பதைக் கருத்தில் கொள்க.

இனி பொருளாதார ஒற்றுமையை சிறிது அலசி ஆராய்வோம். பல மாகாணங்கள் மொழிவாரியாக இணைக்கப்படுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட ஏதுவாகிறது.

உதாரணமாக பல மந்திரிகள் வேலையிழக்க நேரிடலாம். படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தாங்கிக் கொண்டாவது ஒரு நாடு வாழ்ந்துவிட முடியும். ஆனால் மந்திரிகளின் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறதே, அதை உடனடியாக தீர்த்து வைக்கா விட்டால் பெரும் பெரும் கொந்தளிப்புகள் ஏற்பட்டுவிடும். இதைத் தீர்த்து வைப்பதற்கு கீழ்க்கண்ட யோசனைகளை வழங்குகிறோம்:

சாந்தினிகேதத்தைப் போல 'மந்திரி கேதம்' என்னும் கலாசாலையை நிறுவி, அங்கு மந்திரியாக விரும்புபவர்களுக்கு பேசக் கற்றுக் கொடுக்கலாம். காமராசரை 'சட்டசபையில் எப்படிப் பேசுவது?' என்னும் புத்தகத்தை எழுதச் சொல்லி அதையே நமது 'மந்திரி கேதத்தின்' பாடப்புத்தகமாக வைக்கலாம். இப்படியாக வேலையில்லாத மந்திரிகளைப் பயன் படுத்திக் கொள்ளலாம்

எமது இரண்டாவது மகத்தான சிபார்சாக கீழ்க் கண்ட மதியூக மிக்க யோசனையை வழங்குகிறோம்:

அருட்திரு முன்ஷியின் திட்டத்தினால் நமது மந்திரிமார்கள் அனைவரும் 'வனமகோத்சவம்' செய்யக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேற்படி உற்சவத்தின்போது அவர்கள் நட்டுவைத்த மரங்களும், செடி கொடிகளும் ஏராளம்! ஏராளம்!! எனவே அந்த அனுபவத்தை அத்தாட்சியாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு மந்திரிமார்களும் நாட்டின் பல்வேறு முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான பார்க் என்னும் பூங்காக்களில் தோட்டக்காரர்களாக பதவி ஏற்கலாம்!

—இந்த ஏற்றமிகு யோசனைகளோடு எங்கள் கமிஷன் ரிப்போர்ட்டை இத்துடன் முடிக் கொள்கிறோம்.

★

'பொருளாதாரங்களே' இப்போதாவது புரிகிறதா?

"வால்மீகி இராமாயணம் மிக பிந்திய காலத்தின் தொகுப்பாகும். அது பாரதப் போருக்குப் பிற்பட்ட பிரபுத்வ இந்தியாவுக்கு பிரதிநிதித்வம் வகிக்கும் கவிதையாகும்; அது பிரபுத்வ காலத்தின் சிந்தாந்தப் பொருளைக் கொண்டு ராம—ராவண யுத்தத்தை விவரிக்கிறது."

—"பண்டைக் கால இந்தியா"
எழுதியவர் : எஸ் ஏ டாங்கே.
தமிழில் : எஸ். ராமகிருஷ்ணன்.

★ ★ ★

"ஆரியர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இந்திய வில் குடியேறினர்; அவர்கள் காலத்தைக் குறிப்பிட முடியாது. அவர்கள் வால்கா நதிக் கரையிலிருந்த ஆரியர்களிடமிருந்து பிரிந்து வந்தவர்கள் என்பதே இந் நூலாசிரியர் கருத்து.

ஆரியர் இந் நாட்டிற்கு வருவதற்கு முன்னே இந் நாட்டில் வாழ்ந்தவர்கள் திராவிடர்கள். அவர்கள் ஆரியர்களைவிட நாகரிகம் பெற்றிருந்தனர்."

—ஜனசக்தி விமர்சனம்.

பண்டிதர் தரும் 'பாடம்'!

"இருபது ஆண்டுகளுக்கு முன் நான் கோவாவிற்குப் போயிருந்தேன். அப்போது விமான நிலயத்திலே ஆயிரக் கணக்கான கோவா வாசிகள் என்னை வரவேற்றார்கள். குழுமியிருந்தோர் தொகை சுமார் ஆறாயிரத்துக்குக் குறையாது. இதிலிருந்து என்ன தெரிகிறது? இருபது ஆண்டுகளுக்கு முன்பே கோவா வாசிகள் இந்தியாவோடு இணைய விரும்பினர் என்பதைத்தானே விளக்குகிறது?"

— இப்படிக் கேட்டார் இந்தியாவின் பிரதமர் நேரு.

ஆமாம்; ஆறாயிரம் பேர் அன்னியச் சீமையில் கூடினார்கள். அதை ஆதரவுக் கறிகுறியாக எடுத்துக் கொண்டார். சரி; இதோ இந்தச் செய்தியையும் பாருங்கள்.

சில நாட்களுக்கு முன்னால் — ஒரு ரிக்ஷாக்காரன் போலீஸ் அணியை மீறிக் கொண்டு பிரதமரின் பவனியைக் குறுக்கிட்டான், தன்னுடைய குறைகளைத் தெரிவிக்க!

—இது பத்திரிகைச் செய்தி. இதற்கு என்ன விளக்கம் தருகிறார், மோதிலால் மைந்தர்?

தன்னுடைய ஆட்சியைப் பற்றி அவர் ஊகித்துணரும் உண்மைதான் என்ன? கோவாவிலே அப்போது ஆதரவு—இந்தியாவிலே இப்போது அதிருப்தி—இதுதானே அவர் நமக்குக் காட்டவிருக்கும் பாடமாக இருக்க முடியும்!

—இப்படிக் கேட்கிறார் காரகா, 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில்!

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 30—9—55 வெள்ளி

வியர்வைத் துளிகள் !

திராவிட முன்னேற்றக் கழகம், திருச்சியிலே நடத்த இருக்கிற மாநில மாநாட்டிற்காக நிதி திரட்டுகிற பணியிலே ஈடுபட்டிருக்கிறது என்பதும், திராவிடப் பெருங்குடி மக்கள் தரும் சிறுதொகைகள் பெருகி இதுவரை இருபதாயிரத்தை எட்டிப் பிடித்திருக்கிறது என்பதும் நாடறிந்த செய்தியாகும். ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ், மாநாடுகளோ, திருவிழாக்களோ நடத்திட எண்ண வேண்டியதுதான் தாமதம்—'எண்ணிக் கொள்க எங்கள் பணத்தை' என்று ஆலைஅரசர்களும்—பண முதலைகளும் முந்திக் கொண்டு தரத் துடித்துக் கிடக்கிறார்கள்.

ஆலைஅரசுகள் வாங்கிய ஆயிரம், பதினாயிரம் ரூபாய் கட்டணச் சீட்டுகளின் உதவியால் நடைபெற்ற ஆவடி மாநாட்டிலேதான் சோஷலிச மாதிரித் தீர்மானத்தை நிறைவேற்றிக் கண் துடைத்தார்கள் காங்கிரசார்! பொதுத் தேர்தலிலே காங்கிரசை எதிர்த்து நின்ற சுயேச்சை முதலாளிகள், ஆயிரக் கணக்கிலே ஆவடிக்குக் கப்பம் கட்டினார்கள் என்பதை ஆதார ரீதியாக நிரூபிக்க முடியும். ஆட்சிக் கோல் கையிலே—ஆட்டி வைக்க அடிமைப் பண்பினர்—ஆறென்றால் நூறென்று தர ஆஸ்தி படைத்தோர்—இத்தனை வலிமை வாய்ந்த கோட்டையை சரிக்கத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் படை திரட்டி நிற்கிறது.

வெள்ளிப் பணமில்லை; வியர்வைத் துளி கொட்டி மீந்துவைத்த செப்புக் காசுகள்! சிறு துளிகள்! பெருவெள்ளம் ஆவது எப்போது என்று ஏங்கி நின்று, சேமித்து வைக்கும் செல்வம்! ஆடல் பாடலுக்கோ, அதிர் வேட்டு ஆடம்பரங்களுக்கோ, தேர் திருவிழாக்களுக்கோ, தேவாலயத் திருப்பணிகளுக்கோ இல்லாமல், தேம்பும் திராவிடத்தை வாழ்விப்பதற்குப் பயன்படுத்தும் தொகை! ஓடியாடி—காடுமேடு சுற்றி—காலணா அரையணாக்களாகச் சேர்த்திடும் பொது நிதி! புழுதி மேடாகக் கிடக்கும் பிறந்த பூமியை பூஞ்சோலையாக்கிட வழங்கும் பொற்கிழி! 'உழைப்பவர்க்கு இந்த நாடு' என்று உரிமைக் குரல் தருவதற்கு உழைப்பவன் தரும் தொகை இதுவெனப் பேசும் ஒவ்வொரு அணாப் பணமும்! அப்படிப் பெற்ற அணாப் பணங்கள்தான் சென்னையிலே கம்பீரமாக நிற்கும் 'அறிவகம்'—'நம்நாடு' அச்சகம்—நுங்கம்பாக்கம் மைதானம்—இன்னும் பலப் பல கழக சொத்துக்கள்!

அனைத்தும் தொழிலாளர் தந்தது, திராவிட ஏழைமக்கள் தந்தது. உழைப்பாளிகளின் வியர்வை மாளிகைகள் அவைகள்!

அண்மையிலே நடைபெற்ற திராவிடப் பிரிவினை வாரத்தின் போது சென்னை பெரம்பூர் ரெயில்வே தொழிலாளர்கள், அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே ஐநூறு வெண் பொற்காசுகள் அளித்து மகிழ்ந்திருக்கிறார்கள்; மாநில மாநாட்டுக்காக! அதே கூட்டத்தில் அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் பாக்டரி தொழிலாளர், செம்பியம் இந்தியா பிஸ்டன் தொழிலாளர், பண முடிப்புக்கள் தந்து தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் தொழிலாளர்கள் எத்தனை அன்பு கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இஃதோர் தக்க சான்று! அந்த மேடையிலே பேசிய தோழர்கள் முகில் வண்ணன், அவையரசு ஆகிய தொழிலாள நண்பர்கள், **"தாங்கள் வழங்கும் இந்தச் சிறுதொகை, பேசும் ஆற்றல் பெற்றிருந்தால்—தி. மு. கழகத்திடம் ரயில்வே தொழிலாளர்கள் எத்தனை அன்பும், பற்றும், ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறும்."**

—என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது முரசொலி மேதின இதழிலே வெளி வந்த தலையங்கத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்புகள் பற்றியும், இனியும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தொடர்புகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறோம்.

"தொழிற் சங்கங்களிலே நேரடியாக தி. மு. கழகத் தோழர்கள் ஈடுபட்டு நடத்துவதென்ற அரக்கோணம் பொதுக்குழுவின் தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் முறையில் பேரூர் பொதுக் குழு மேற்கொண்ட செயல் முறைகளைப் பற்றியும் விளக்கியிருக்கிறோம்.

தொழிற் சங்க அமைப்புக்கான சூழ்நிலைகள் ஏற்படுவதை அவ்வப்போது தி. மு. க. தலைமை நிலையத்திற்கு அறிவித்திடுக"

என்றும் பேரூர் பொதுக் குழு கேட்டுக்கொண்டிருக்கிறது. பேரூருக்குப் பிறகு தொழிலாளர்களின் கவனத்தை திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதும் கவர்ந்திருக்கிறது என்பதின் அடையாளமாகத்தான், எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு நாடெங்கும் தி. மு. க. சார்பில் மேதின விழாக்கள் கொண்டாடப் பட்டிருக்கின்றன. 'பெரம்பூர்கள்' நாடெங்கும் நடைபெற்றிருக்கின்றன. தொழிலாளர்களின் நலனுக்காக வென்று அமைக்கப்பட்டுள்ள அமைப்புகள்—அரசியல், பொருளாதாரம் என்ற அளவோடு நின்று விட்ட காரணத்தால், தொழிலாளருக்கு அவசியமாகவும் அவசரமாகவும் தேவையான சமுதாய விழிப்பு ஏற்படாமலே போய்விட்டது. பெரம்பூரில் அண்ணா கூட்டத்தில் பேசிய தொழிலாளத் தோழர் முகில் வண்ணன் இதை அழகாக விளக்கியிருக்கிறார். அவர் வேலை பார்க்கும் பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் பிள்ளையார் சதுர்த்திக்காக இருபதாம் தேதி விடுமுறை இருந்ததாம். ஆனால் பஞ்சாங்கப்படி சதுர்த்தி பத்தொன்பதாம் தேதி இருந்ததால், தொழிற் சங்க தலைவர்கள் விடுமுறையை மாற்றி அமைக்கக் கேட்டு, அதற்காக வேலை நிறுத்தம் செய்தார்களாம். எப்படியும் ஒரு நாள் விடுமுறைதானே என்று போகாமல், பிள்ளையாரைப் பூசை செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி, அதற்காக விடுமுறை கோரி, வேலை நிறுத்தம் செய்யும் பிற்போக்குத் தலைவர்களின் வசத்திலே தொழிலாளர்கள் சிக்கி அவலமுறுகிறார்கள் என்பதற்கும், சமுதாய மாற்றத்திற்கான அறிகுறிகள் தற்போதைய தொழிற் சங்கங்களில் இல்லையென்பதற்கும் இந்த நிகழ்ச்சி தக்க எடுத்துக் காட்டாகும்.

பரம்படித்து நிலம் பண்பட்ட பிறகே பயிர் செய்ய இயலும் என்கிறோம் நாம்!

கட்டாந்தரையானாலும் கதிர் சாயும் என முழக்குகிறார்கள் அவர்கள்! சமுதாயக் கழனி திருத்தப் படாமல், அரசியல் விளையாது! பொருளாதாரக் கதிர் குலுங்காது:

இந்த உண்மையை உணர்ந்து கொண்ட உழைப்பாளிகள், தங்கள் உரம் வாய்ந்த கரங்களை தி. மு. கழகத்தின் பக்கம் நீட்டுகிறார்கள். நேசக் கரம் கண்டு, பாசக் குரல் தருகிறது தி. மு. கழகம்; "பாட்டாளிகளே! நாங்கள் உங்கள் பக்கந்தான்"—என்று! நாடெங்கிலுமுள்ள கழகத் தோழர்கள் தொழிற் சங்கங்களின் தொடர்புகளைப் பெருக்கி வருகிறார்கள் என்ற செய்தி கேட்டு சிந்தை குளிர்கிறோம். தொழிற் சாலைகளிலே உள்ள நமது கழக நண்பர்கள் தி. மு. கழகத்தின் சமுதாய திட்டத்தை, விடுதலை விருத்தத்தை, பொருளாதார உரிமை முழக்கத்தை—பாட்டாளிகளின் காதுகளிலே அன்றாடம் ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல்—நமக்குத் தணியாத ஆர்வத்தை அளித்திடத் தவறவில்லை. ஆலைகளிலே—வேறு தொழிற்சாலைகளிலே—கழனியிலே—கடும் வெயிலிலே—எங்கெங்குமுள்ள "வியர்வைத் துளிகள்" எல்லாம் விடுதலை கீதம் பாடியபடி நமது அணிவகுப்புக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதன் எடுத்துக் காட்டுதான் பெரம்பூர்! அந்த வியர்வைத் துளிகள்தான் ஐநூறு வெண் பொற்காசுகளாக மாறி, அண்ணாவின் கையிலே அமர்ந்தன. அவை நாளை மாநில மாநாட்டிலே—தொழிலாளரை வரவேற்கும் தோரண வாயிலாக உருவெடுத்து நிற்கும் என்பதை யாரே மறுக்க வல்லார்!

வியர்வைத் துளி வீண் போகாது! விடுதலைப் படையின் வெற்றி முரசம் கேட்டே தீரும்! அரசியல்—சமுதாயம் — பொருளாதாரம் மூன்றிலும் தாழ்ந்து கிடக்கும் இந் நாட்டைப் பொன்னாடாக ஆக்கும் வரையில்; அயர்வை அச்சத்தால் போக்கி—ரத்தத்தை வியர்வைக் குளமாக்கி வாடுகின்ற பாட்டாளியின் வாழ்வு சீர்படும் வரையில்—நமக்கு நிறைய வேலையிருக்கிறது. அந்த வேலையை எல்லாத் துறைகளிலும் திறமையோடு செய்து முடிப்போம்! அந்தப் புதிய நம்பிக்கையை நமக்கு அளிப்பதுதான் பெரம்பூர் தந்த பணமுடிப்பு—ஆம்; அந்த வியர்வைத் துளிகள்!

*

மூக்காலே பாடி கண்ணாலே பேசுவோர்!

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

இல்லங்காணும்! நம்ப மூணு பேருந்தான் மும்மூர்த்திகள்—உதாரணமா நீர்தான் பரமசிவன்-நான்தான் மகாவிஷ்ணு!

சாமா: சரிதான்; தீட்சதர் மகாவிஷ்ணுவாகவே இருக்கட் பார்க்கிறார். கோபிகாஸ்த்ரீகளோட கும்மாளம் போடலாமுன்னு!

தீட்: சாமா சாஸ்திரிகளே! பிரமா என்ன சொத்தையோ? தானே படைத்த திலோத்தமையை தானே தாரமாக்கிக் கொண்டவரோ இல்லையோ! பார்வதியே, அடையாளந் தெரியாமல் அவரோடு இணங்கி இருந்தாளய்யா! அய்யர்வாளைப் பரமசிவன்னு சொல்லிட்டோம்-அய்யர்வாள்! தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் எல்லாம் ஜாக்கிரதை!

தியாகர்: என்ன சொல்றேன் னேக்கு ஒண்ணுமே புரியலே, போங்காணும்!

சாமா: விபரமாச் சொல்றேன் கேளும். திருவாரூரிலே பிறந்த சங்கீதப் பிரியாளுக்கு இப்போ ஞானோதயம் ஆகி நம்ப மூணு பேர் ஆத்தையும் கண்டு பிடிச்சுட்டா! அந்த ஆத்தையெல்லாம் புதுப்பிச்சு, திருவாரூரை சங்கித மும்மூர்த்தி கேந்தரமா ஆக்கப் போறா! அதுக்காக ஒரு கமிட்டி போட்டிருக்கா!

தியாகர்: அரே ராமா! என்னாங்காணும் அதிசயம்? நம்ப ஆத்தையெல்லாம் எப்படி அடையாளங் கண்டு பிடிச்சா?

சாமா: நோக்கு புதுத் தெருவிலே கண்டு பிடிச்சிருக்கா! னேக்கு மேட்டுத் தெருவிலே கண்டு பிடிச்சிருக்கா! தீட்சதருக்கு மேல வடம்போக்கித் தெரு! கண்டு பிடிச்ச ஆத்தங்களை ஜீரணோத்தாரணம் செய்யப் போறா. அப்புறம் வருஷா வருஷம் உற்சவம் செய்யப் போறா! திருவையாத்திலே நோக்கு நடக்குமே—அது போல பிரமாண்டமா நடத்த திட்டம் போட்டிண்டு இருக்கா!

தியா: யார் இதற்கெல்லாம் சிரமம் எடுத்துண்டு வரா?

தீட்ச: எல்லாம் நம்மவா தான் கிழேயிருந்து வேலை செய்யறா! தமிழாள்ள தாசானு தாசனா யிருக்கிற இரண்டொரு பணக்கார மனுஷாளையும் பிடிச்சுபோட்டு வேலை செய்றா! கமிட்டிக்குத்தலைவர் கரும்பாலை முதலாளி—கருவேப்பிலைபோல அவரை உபயோகிச்சுக்குவா நம்பளவா!

இரும்புப் பெட்டி நம்ப கல்கி சதாசிவம் கையிலே!

முதல்ல ஒரு கமிட்டி போட்டா! அதிலே உள்ளூர் வித்வ சிரோன்மணி வைததிருத பிள்ளையை காரியதரிசியா அமைச்சா!

தியா: அவர், சூத்திரனாச் சேங்காணும்!

சாமா: அதனாலேதான் அவரை அந்தப் பதவியிலே யிருந்து தள்ளிட்டா! சூத்திரனாயிருந்தா கூட கவலையில்லை—பணமாவது நிறைய இருக்கவேண்டாமோ? பணத்துக்குத்தான் தீட்டு இல்லியேங்காணும்! அதனாலே தானே, பணப்புள்ளியைத் தலைவராப் போட்டுண்டு காரியம் நடத்துறா நம்பளவா!

தியா: நம்பளவா என்ன சாமான்யமா? நம்பளவாளுக்கு இருக்கிற உணர்ச்சி வேற யாருக்குங்காணும் இருக்கு? ஓய் சாஸ்திரி! ஓய் தீட்சதரே! அதே திருவாரூரிலேதான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவதரிச்சார்னு சொல்றா! அவருக்கு யாருங்காணும் மண்டபங் கட்ட நினைச்சா! நினைக்கமாட்டா! நம்பளவாளுக்கு இருக்கிற உணர்ச்சி, அவாளுக்கு ஏதுங்காணும்? சூத்ராளோ இல்லையோ? நீர் பாருமே—னேக்கும், நோக்கும். அவாருக்கும் மண்டபம் கட்டி கும்பாபிஷேகம் பண்ணினான்னு, அதுக்கு கச்சேரி பண்ண அந்த சூத்திர வித்வான்கள் எல்லாம் அடிச்சு மோதிண்டு வந்து விழுவானுங்க!

சாமா: நன்னாச் சொன்னீர்! நன்னாச் சொன்னீர்! அவாளுக்கு, அவாள்ங்கிற உணர்ச்சி ஏற்பட்டா,அப்புறம் நமக்கு

தெருவுக்கும் பெயரா? திருவாரூர் தாங்காது!

ஏதுங்காணும் பிழைப்பு! சங்கீத சாகித்ய கர்த்தாக்களே நாம்தான்னு நம்பளவா நிலை நாட்டிவிட்டா! அவாள்ள நம்பளைவிட பெரிய ஆளெல்லாம் இருந்திருக்கா!

சிலப்பதிகாரம் எழுதியிருக்கிற இளங்கோவடிகள் சங்கீதத்தைப்பத்தி புட்டு புட்டு சொல்லியிருக்கார்! அந்தத் தட்டுக்கெட்டதுகள் அதைப் பத்தி நினைக்குதோ!

தீட்ச: நினைக்காமதானய்யா இருக்கணும்! அப்பதான் நமக்கு வேட்டை! இசை இலக்கணம் கூறிய இளங்கோவடிகள் மட்டுமா? அருணகிரிநாதன் நம்மைப் போலத்தான் ஆண்டவனைப் பத்தி அழகாப் பாடியிருச்கான்! அவனை யாருங்காணும் தூக்கி வச்சிண்டு ஆடுறா? கீர்த்தனத்தை உண்டாக்கியதே நம்பதான்னு சொல்றா! ஆனா, நம்ப கீர்த்தனமெல்லாம் சூத்ராளுக்கு புரியாத பாஷையிலே அமைச்சிண்டு இருக்கோம். அவாள்ள தமிழ்க் கீர்த்தனை பாடியிருக்கான் முத்துத் தாண்டவன்னு ஒருத்தன்! அவன் எங்கேயோ மூலையிலே கிடக்கிறான்.

சாமா: இசைக்காகவே அவாள்ள ஒரு குலத்தார் இருக்கா, இசை வேளாளர்னு அழகான தமிழ்ப் பேர் வச்சுண்டு!

தியாகர்: அதில சூட்சுமம் தெரியுமோ ஓய் உமக்கு! இசைக்காகவே அவாள்ள ஒரு பிரிவு—இசை வேளாளர்னு இருந்தாலும், அந்தப் பிரிவு, நம்ப பிராமணாளைத்தான் எதிர்பார்த்துக் கிடக்குங் காணும்! எப்படித் தெரியுமோ? பெரிய பெரிய வித்வானெல்லாம் அவாள்ள இருக்கா! கோடி கொடுத்தாலும் ராஜரத்தினத்தின் தோடிக்கு ஈடாகுமோன்னு ஜனங்கள் பாராட்டுரா!

நாக சர்ப்பங்கள்கூட மயங்கி விடும் திருவெண்காட்டின் நாயன ஒலி கேட்டுன்னு புகழுரா! சக்காயி — காருகுருச்சி அருணசலம் — பிச்சையப்பா! அப்பப்பா! அவாளிடம் நம்பளவா எல்லாம் பிச்சை யெடுக்கணும்! முதல்ல, மூச்சு கொடுத்து நாயனத்தை ஊத முடியாதுங்காணும் நம்மாலே! நம்பளவா எல்லா தொழிலையும் செய்துட்டா! தவுலையும்-நாயனத்தையும் மட்டும் தொடலியே, ஏன் தெரியுமோ? பரம்பரை பலஹீனங்காணும், பலஹீனம்! மலைக் கோட்டை பஞ்சாபி-நீடாமங்கலம் மீனாட்சி-ராகவன்—தங்கவேலு இவாள் எல்லாம் தவுல் அடிச்சா, இடி-மின்னல் — புடல் — எல்லாம் முழங்குமேங் காணும்! முடியுமா, நம்பளவாளாலே! மூக்காலும் முடியாது! மூக்காலே பாடிவிட்டு, கண்ணாலே பேசிவிட்டு, கரகோஷம் வாங்குறவா தானய்யா நம்ம ஜாதியிலே ஏராளம்!

ராஜரத்தினத்தின் காதிலே தோடும் ஜொலிக்குது-தோடியும் ஜொலிக்குது! சக்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழியிறார் தேசிகர்! சிந்தை சிலிர்க்கப் பாடுகிறார் சித்தூரார்! சிதம்பரம் ஜெயராமின் இசையோ தித்திக்கும் விருந்து-தெவிட்டாத அமுது! நடசிவாயம் தேனிடை ஊறிய சுவைகளைப் பாட்டாகப் பொழிகிறார். பிடிலின் தந்தியைத் தொடுகிறாரா, அல்லது நமது இதய நரம்பை அசைக்கிறாரா என்று கும்பகோணத்தாரைப் பார்த்து குதூகலிக்கிறார் ஜனங்கள்! இவ்வளவு இருந்தும், இவாளுக்கெல்லாம் மதிப்பும், பெருமையும் வேண்டும்னு எங்கே போகணும்தெரியுமோ? நம்மவா நடத்துற சங்கீத அகடமிக்குத்தான் போகணும்! நம்மளவா பாத்து பட்டங் கொடுத்தாதான் இதுகளுக்கு உச்சி குளிரும்! நியாயமா பாத்தா நம்பளவாளுக்கு பட்டம் கொடுக்க வேண்டிய தகுதிஉடையவா அவாள்தான்! ஆனா நம்பளவா திறமையால அவாள் நம்பளவாளுகிட்ட நமஸ்காரம் போட்டு பட்டம் வாங்குறா!

தீட்ச: நாம், பட்டம்னு கொடுத்தாலும் அதுக்கு பேரு பட்டமில்லைங்காணும்! அதுக்கு சரியான பேரு, இளிச்சவாப் பட்டம்!

சாமா: சபாஷ்! சபாஷ்! பேஷ்! பேஷ்! பிரமாதமாச் சொன்னீர். அவாள், இப்படியே இளிச்சவா பட்டம் வாங்குறவாளா இருக்கிற வரைக்கும்—நம்ப மூணு பேருக்கு மும்மூர்த்தி மண்டபம் மட்டுமல்ல; நம்ம பிராமண சங்கீதவித்வான்கள்—(அபசுரங்கள் உட்பட அனைவருக்கும் சேர்த்து) எல்லோருக்குமாக, "**முப்பத்து முக்கோடி தேவாள் மண்டப**"ங் கூட கட்டுவா!

தீட்ச: நன்னா கட்டுவா!—கல்கியிலே சங்கராச்சாரியார் அறிக்கை கொடுத்திருக்காரே—படிச்சேளோ? அதாவது என்னைப்பத்தி சொல்லியிருக்கார்! அதாவது; "**ஆழ்வார்களும், நாயன்மார்களும், அருணகிரி நாதரும் ஒருங்கே சேர்ந்து அவதரித்த மூர்த்தி, தீட்சதரேயாவார்!**" எப்படிங்காணும்? அறுபத்திமூணு நாயன்மார்—பனிரெண்டு ஆழ்வார்—அருணகிரி நாதர்—எல்லாரும் சரி; இந்த தீட்சதர்வாளும் சரின்னு சங்கராச்சாரி சொல்றார்! கல்கியில் போடுறார்! அதைப் படிச்சிண்டு நம்பளவா சந்தோஷப்படுரா! சூத்ராள், ஆனந்தம் தாங்க முடியாம ஆடுரா!

சாமா: **அதுமட்டுமில்லைங்காணும் — திருவாரூரிலே இந்த வருஷம், காங்கிரஸ்காரா ஜெயிச்சு வந்துட்டா, முனிசிபாலிடிலே தெருவுக் கெல்லாம் நம்ப பேர் வைக்கப்டோறு—தெரியுமோ?**

தீட்ச: சாஸ்திரிகளே! அது மாத்திரம் கொஞ்சம் கஷ்டங்காணும்! அப்படி பெயர் வைக்க தீர்மானம் போட்டா, பெரிய கிளர்ச்சி நடந்தாலும் நடக்கும்.

சாமா: ஆங்! அதெல்லாம் நம்மளவா தந்திரமா நடந்துக்குவா! அது அதுக்கு யார் யாரைப் புடிக்கணும்—யார் யாரை அனுப்பணும்—இதெல்லாம் நன்னாத் தெரியுங்காணும் நம்பளவாளுக்கு!—சரி, வாரும்—தம்புராவை எடும்! மூணு பேரும் ஜெயகீர்த்தனை பாடுவோம்.

★

திடீரென விழித்துக்கொண்டேன். கனவு கலைந்தது-நினைவு கலையவில்லை. எங்கெங்கோ அலைந்து கொண்டேயிருக்கிறது. அதோ, தூரத்தில் இசை கேட்கிறது. ஆகா—அருமையான கீதம்—"**முந்து தமிழ் மாலை கோடி கோடி!**"—இனிய வளம் நிறைந்த தமிழ்ச் சொற்கள் இசை மழையிலே ஆலங் கட்டிகள் போல உதிர்ந்து கொண்டிருக்கின்றன. இன உணர்ச்சியற்ற இந்த சமுதாய மாந்தரை நினைத்து என் கண்களிலேயிருந்தும் நீர் முத்துக்கள் உருண்டு கொண்டிருக்கின்றன.

★

... சந்திப்பு!

'டமாஸ்குனிஸ்'

[புது டெல்லியில் நேருவின் அறை: நேரு நாற்காலியில் உட்கார்ந்து 'பைல்'களைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அவருடைய வாயில் சிகரெட் புகைந்து கொண்டிருக்கிறது. நெற்றியிலுள்ள சுருக்கங்களில் வியர்வைத் துளிகள் ஒன்று சேர்ந்து தாரையாக வழிந்தோடுகிறது.

அறையின் கதவைத் திறந்து கொண்டு கம்பீரமான ஒரு உருவம் உள்ளே நுழைகிறது. வந்த உருவத்துக்கு வயது சுமார் முப்பதிருக்கலாம். நீண்ட கூரிய மூக்கு, ஒளி உமிழும் கண்கள், அகன்ற தோள்கள், அஞ்சாமை முழங்கும் நெற்றி. அவ்வுருவம் நேருவின் முன் வந்து, "வணக்கம், நேருஜி!" என்று கூறி எதிரிலுள்ள நாற்காலியில் அமருகிறது...]

நேரு: நமஸ்தே! யார் நீங்கள்?

உருவம்: என்ன நேருஜி, என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? நன்றாகப் பாருங்கள்.

நேரு: (சற்று நேரம் உற்றுப் பார்த்தபின்) நீங்கள்......நீங்கள்... அலக்......

உருவம்: ஆமாம், சாட்சாத் அலக்ஸாண்டர்தான் — மாசிடோனியா மன்னன். உலகையே ஒரு குடைக்கீழ் ஆளத் திட்டமிட்ட வீரன்! உங்களைப் பார்த்து அளவளாவிவிட்டுப் போகலாமென்று தான் வந்தேன்.

நேரு: ரொம்ப சந்தோஷம், கையில் ஏதோ புத்தகம் வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே!

அல: நீங்கள் எழுதிய 'உலக சரித்திரம்'தான் அது!

நேரு: ஆமாம்; 1930-லிருந்து 1934-வரை நான் பல சமயங்களில் சிறையில் இருந்த பொழுது சரித்திர நிகழ்ச்சிகளை விமர்சனம் செய்து, என்னுடைய மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்புத்தான் அந்த நூல்.

அல: அதன் முன்னுரையிலேயே குறிப்பிட்டிருக்கிறீர்கள், சற்று காரசாரமாகவே உங்கள் கருத்துக்களை அதில் தெரிவித்திருப்பதாக.

நேரு: [அசட்டுச் சிரிப்புடன்] ஆமாம்!

அல: எனக்காகவே ஒரு அத்தியாயத்தை—17-வது அத்தியாயம் என்று நினைக்கிறேன் — ஒதுக்கியிருக்கிறீர்கள். தலைப்பு என்ன தெரியுமா? [புத்தகத்தைத் திறந்து படிக்கிறார்] 'புகழ் பெற்ற வெற்றி வீரன்—ஆனால் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்ட இளைஞன்!' நேருஜி, என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி என்மீது குற்றப் பத்திரிகையே வாசித்திருக்கிறீர்கள்.

நேரு: அது என் சொந்த அபிப்பிராயம். அதைக்கூற எனக்கு முழு உரிமையுண்டு.

அல: சபாஷ்; அதுதான் அசல் பேச்சுரிமை!—எழுத்துரிமை! சுத்த ஜனநாயகம்! குற்றச் சாட்டுகளுக்குச் சமாதானம் சொல்ல எனக்கு உரிமையுண்டல்லவா?

நேரு: நிச்சயம் உண்டு. என்னைப் போன்ற ஜனநாயக வாதியைப் பற்றி உங்களுக்கு அந்தச் சந்தேகமே வேண்டியதில்லை.

அல: விசாரணையில்லாமலே சிறையில் தள்ளும் தடுப்புக்காவல் சட்டம் என்ற ஆள்விழுங்கிச் சட்டம் அமுல் நடக்கும் நாடாயிற்றே என்றுதான் கேட்டேன்.

நேரு: என்ன அலக்ஸாண்டர், என்னைக் கேலி செய்கிறீர்களா?

அல: அப்படியொன்றுமில்லை! என்னைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள், 'அலக்ஸாண்டர் பேராசைக்காரன்: தன்னை ஒரு கடவுளாகவே எண்ணிக்கொண்டான்' என்று.

நேரு: உங்களைப் பற்றி சரித்திர ஆசிரியர்களின் தீர்ப்பே அது தான். நான் என்ன செய்யட்டும்.

அல: என்னைப் பற்றி உங்களைப் போன்ற சரித்திர ஆசிரியர்களின் தீர்ப்பு எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், உங்களைப் பற்றி நீங்களே எழுதியிருக்கும் தீர்ப்பு என்னவென்று நினைவிருக்கிறதா?

நேரு: நீங்கள்கூறுவது எனக்கு விளங்கவில்லையே!

அல: [பையிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து மேஜைமேல் போடுகிறார்] இது கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'மாடர்ன் ரெவ்யூ' என்ற மாத சஞ்சிகையின் பழைய பிரதி. இதில் ஒரு முறை உங்களுடைய பெயரைப் போடாமல், நீங்களே உங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினீர்களே, நினைவிருக்கிறதா?

நேரு: இதெல்லாம் எங்கிருந்தய்யா சேகரித்தீர்; பெரிய தொல்லையாகவல்லவா போய்விட்டது.

அல: கோபப்படாதீர்கள் நேருஜி. அதில் உங்களைப் பற்றி நீங்களே குறிப்பிடுகிறீர்கள். "ஜனநாயகப் போர்வையில் நேரு தன்னை ஓர் சர்வாதிகாரி ஆக்கிக் கொள்ளப் பார்க்கிறார். மக்கள் லட்சக் கணக்கில் அவரைக் காணக் கூடியவுடன் தன்னை ஓர் கடவுளாகவே எண்ணிக் கொண்டு வசீகரமான ஒரு புன்னகையை வரவழைத்துக் கொள்ளுகிறார். இந்த நிலையில் மக்கள் அவரை வளரவிட்டால் அவர் ஒரு சர்வாதிகாரியாகவே மாறிவிடுவார்"—கேட்டீர்களா நேருஜி! உங்களைப் பற்றி நீங்களே அளித்துள்ள தீர்ப்பு இது!

நேரு: என்னை நான் திருத்திக் கொள்ளுவதற்காகவும், என் குறைபாடுகள் மக்கள் கண்ணில் படவும் நான் அக்கட்டுரையை எழுதினேன்.

அல நீங்கள் பெயர் போடாமல் எழுதப்போய், யாரோ உங்களைப் பிடிக்காத அரசியல் எதிரிகள், பிரிட்டிஷ் தாசர்கள் இப்படித் தாறுமாறாக எழுதியதாக எண்ணிக்கொண்டு வாசகர்கள் கண்டனக் கடிதங்கள் ஆசிரியருக்கு எழுத, முடிவில் எழுதியது யார் என்பதை அறிவிக்க ஆசிரியருக்கு அனுமதியளித்தீர்களல்லவா?

நேரு: ஆம், பிறகு மக்கள் என்னுடைய நேர்மையையும் ஜனநாயகத்தில் எனக்குள்ள நம்பிக்கையையும் புரிந்து கொண்டார்கள்.

அல: இல்லை, குற்றங்குறையற்ற நேர்மையாளனாக உங்களைக் காட்டிக் கொள்ள நீங்கள் செய்த சூழ்ச்சி ஏற்பாடு அது. உங்களைப் பற்றித் தெரிந்து மக்கள் உங்களைத் திருத்த வேண்டுமென்று உண்மையாகவே எண்ணியிருந்தால் கடைசி வரையில் கட்டுரை எழுதியது நீங்கள்தான் என்பதை வெளியிட்டிருக்கக் கூடாது. நீங்கள் சர்வாதிகார மனப்பான்மை கொண்டவர் என்பதற்கு மேற்குறித்த கட்டுரைச் சம்பவத்தை மேற்கோளாகக் காட்டி, உங்களுடைய சகோதரி கிருஷ்ணா ஹத்தீ சிங்கே எழுதியிருக்கிறாரே. தமயனைப் பற்றி தங்கையின் தீர்ப்பே இப்படியானால், என்னைப் பற்றி உங்களுடைய தீர்ப்பை உலகம் எப்படி ஒப்புக் கொள்ளும்?

நேரு: என்னிடம் சண்டை போடவே நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

அல: சண்டை போட்டு சலித்தவனய்யா நான்! இதோ, உங்களுடைய உலக சரித்திரத்தில் மீண்டும் குறிப்பிடுகிறீர்கள், "அலக்ஸாண்டர் சுய கௌரவத்திற்காகப் பல உயிர்களைத் தியாகம் செய்தான்," என்று.

நேரு: அதுகூடப் பொய்யா? பிண மலையின்மீதுதானே உங்களுடைய சாம்ராஜ்யத்தையே அமைத்தீர்கள்!

அல: உண்மை, மனித உயிர்களைவிட என்னுடைய புகழே பிரதானம் என்று கருதினேன். என்னைக் குறை கூறும் நீங்கள் மட்டுமென்ன? உங்களுடைய பஞ்சசீலக் கொள்கைக்குப் பழுது ஏற்பட்டு, உங்களுடைய அகில உலகப் புகழுக்குப் பங்கம் ஏற்படக் கூடாது என்று, கோவா அறப்போர் வீரர்களையும் வீராங்கனைகளையும் வெறி நாயைச் சுடுவதைப்போல் போர்ச்சுகல் ஏகாதிபத்திய வெறியர்கள் சுட்டுக் குவித்தபோதும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கமறுத்தீர்கள். அறப்போர் வீரர்கள் கோவாவிற்குள் நுழைந்தபோது ஆசீர்வதித்தீர்கள். உங்களுடைய பலத்தை நம்பிச் சென்ற அவர்கள் சுட்டுப் பொசுக்கப்பட்ட பிறகு, தனியாகவோ அல்லது பலர் சேர்ந்தோ கோவாவிற்குள் நுழைந்து அறப்போர் புரிவதைக் கண்டித்து உங்களுடைய தலையாட்டி மகாசபையில் (காங்கிரஸ் மகாசபை) தீர்மானம் போட்டீர்கள். உங்கள் புகழ் காப்பாற்றப் படுவதைத் தவிர வேறு கவலை உங்களுக்கு ஏது, நேருஜி?

நேரு: அபாண்டமான குற்றச் சாட்டு! என் பெயருக்கா களங்கம்...! அலக்ஸாண்டர்; இது மாபெரும் அநீதி.

அல: எது? இதோ பாருங்கள், "முன் கோபத்தால் மக்களையும் நண்பர்களையும் கொலை செய்த கொடுமையாளன்" என்று என்னை வருணித்திருக்கிறீர்கள். நீங்கள் ஆத்திரத்தால் அறிவிழந்து பாட்னாவில் பேசவில்லையா? லட்சக் கணக்கில் மக்கள் இறந்தாலும் சரி, நாடே நாசமானாலும் சரி, கொடியின் கௌரவத்தைக் காப்பாற்றியே தீருவேன் — என்று பாட்னாவில் யூனியன் கொடியை எரித்த மாணவர்களை எச்சரித்தீர்களே; ஏன் மாணவர்கள் கொடியை எரித்தார்கள் என்று காரணத்தை ஆராயாது அவர்கள் மீது ஆத்திரத்தைக் கொட்டுவது விவேகமல்ல என்று உங்களுடைய மாஜி சேடர் ஜயப் பிரகாஷ் நாராயண் கண்டித்து விட்டாரே. இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நான் கோபத்தால் சிலரைக் கொன்றது உண்மை. நாகரீக காலத்தில் ஜனநாயக வாதம் பேசுகின்ற நீங்கள், உங்கள் கோபத்திற்கு ஆளானவர்களைச் சட்டத்தின் துணை கொண்டு கொல்லுவேன் என்று சபதமுரைக்கிறீர்கள்; உங்களுக்கும் எனக்கும் என்ன வேறுபாடு நேருஜி! சொல்லுங்கள்!

நேரு: உம்மோடு பேச எனக்கு நேரமில்லை...எனக்கு வேலை இருக்கிறது.

அல: அவசரப்படாதீர்கள் பண்டிட்ஜி! "அலக்ஸாண்டர் புகழ்தேடித் திரிந்தானே தவிர, நாட்டின் நலனில் நாட்டமே காட்டவில்லை. அவன் சாம்ராஜ்

○ தொடர்ச்சி 3-ம் பக்கம்

புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்.....

புதையல் எடுக்க முயற்சிக்கும் மாயாண்டிக் கிழவர் வெள்ளியம்பலத்தின் கண்ணில் சிக்குகிறார். வசமாக சிக்கிக் கொண்ட மாயாண்டி, அம்பலத்திடம் பணிந்துபோக நேரிடுகிறது. இருவருமே புதையலைப் பங்கிட்டுக் கொள்வது என்ற தீர்மானத்துடன், தகட்டில் குறிப்பிட்ட இடத்தில் தோண்டுகிறார்கள். அங்கே ஒரு தகட்டுச் சுருள் கிடைக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ளபடி வேறொரு இடத்தில் வெட்டிப் பார்க்க வேண்டும். அதை யோசித்துச் செய்ய வேண்டுமென்று முடிவு கட்டி, மறுநாள் அந்தக் காரியத்தில் இறங்குவோம் என்ற தீர்மானத்துடன் அன்றிரவு வீட்டுக்குத் திரும்புகிறார்கள்.

42

மேனகா வெற்றி ?

அவர்கள் வீடு திரும்புவதற்குள்ளாக கிடைத்த அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள மேனகா எவ்வளவோ முயன்றாள். முடியவில்லை. மேனகாவின் முயற்சி வெற்றி பெறுகிறதா என்று பார்ப்பதற்காகவே மலையாள பகவதி குறட்டை விட்டுத் தூங்குவது போல நடித்தான். ஜன்னலண்டை நின்று துரையை அழைத்து அழைத்து அலுத்துப் போனாள் மேனகா. என்ன இருந்தாலும் இவனை ஜெயிக்காமல் விடுவதில்லை- என்ற முடிவோடு மேனகா தன் படுக்கையறைக்குப் போய் கட்டிலிலே தொப்பென்று விழுந்தாள். துரையும் தூங்காமல் புரண்டு கொண்டேயிருந்தான். சுவரோரத்தில் உருண்டு கிடந்த மலையாள பகவதியின் குறட்டை சப்தம் வேறு அவனுக்கு இடையூறாக இருந்தது. மலையாள பகவதி குறட்டை விடுவதோடு நிற்கவில்லை; புரளவும் ஆரம்பித்தான். பாவம்; அவனுக்கு கலகலப்பாகப் புரண்டு தூங்குவதற்கு நீளமான தாழ்வாரமே வேண்டும் போலும்! இப்படியும் அப்படியும் புரளாமல் ஒரே திக்கில் உருண்டு வந்து கொண்டேயிருந்தான். ‘நல்ல காலம் பொறக்குது’ என்ற அவனது குடுகுடுப்பைப் பல்லவியையும் தூக்கத்திலே புலம்பிக் கொண்டு புரண்டான்.

> **“எழுவானுக்குத் தொழுவானுக்கு இடையிலே...**
> **காக்கை மூக்கு நிழலிலே...**
> **கள்வர் புகும் வழியிலே...**
> **கண்டாலும் ‘கம்மாளர்’ கண்ணிலே...**
> **எழுபது கோடி பசும்பொன்... ”**

துரை, அவன் புரளுவதற்கு இடங் கொடுத்துவிட்டு, சுவரோரமாக ஒதுங்கிப் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவனது கண்களை அசதி அணைத்துக் கொண்டது. தூக்கத்தின் முதல் வாயிற்படியிலே நுழைந்து விட்டான். அவனது கன்னத்திலே எச்சல் பட்டதுபோல் ஒரு உணர்ச்சி- தூக்கக் கலக்கத்தோடு கன்னத்தைத் தடவிப் பார்த்தான். கன்னம் லேசாக ஈரமாகியிருந்தது. திரும்பிப் பார்த்தான். அவனுக்கு அருகாமையிலே, பகவதி குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

“அடப்பாவி! உனக்கு இந்த வீடே போதாது போலிருக்கே” என்று முணு முணுத்துக் கொண்டே, துரை இன்னொரு பக்கம் போய்ப் படுத்தான். மீண்டும் தூங்க ஆரம்பித்தான். கன்னத்திலே ஏதோ விழுந்தது போலிருந்தது. ஆம்; அரைத் தூக்கத்திலே ஒரு சிறு கனவு. இரண்டு ரோஜாப் பூக்கள் கன்னத்தில் விழுந்தது போல இருந்தது. அவைகளை எடுக்க கன்னத்தில் கை வைத்துப் பார்த்தான். பூக்கள் இல்லை. கன்னம் ஈரமாக இருந்தது. மேலே கூரையைப் பார்த்தான். ஏதாவது பல்லி, கில்லி என்று சந்தேகத்தோடு திரும்பினான். அருகே புரண்டு கிடந்தான், மலையாள பகவதி.

துரைக்கு சிரிப்பும் ஆத்திரமும் பொங்கியது. “என்னடா இது மிருகம் மாதிரி புரளுகிறாய்?” என்று அதட்டிக் கொண்டே பகவதியை பலங் கொண்ட மட்டும் தள்ளி விட்டான். பகவதியோ, தூக்க போதையோடு, ஏதோ புலம்பியவாறு வேறு பக்கம் உருண்டான். துரை, கண்களை இறுக மூடிக் கொண்டு தூங்குவதற்த ஆயத்தம் செய்தான். பகவதி அருகே புரண்டு வருவது தெரிந்தது. அசையாமல் இருந்து கவனித்தான். புரண்டு வந்த பகவதி மெதுவாக எழுந்து ஜன்னல் கதவுகளை சாத்தினான். துரைக்கு சந்தேகம் பிறந்தது. என்ன நடக்குமோ என்று ஆவலோடு எதிர்பார்த்தான். பகவதி தன் இடுப்பிலே மறைத்து வைத்திருந்த ஒரு பளபளப்பான கத்தியை எடுத்து தரையிலே வைத்தான். துரைக்கு நடுக்கம் அதிகமாயிற்று. கத்தியைக் கைப்பற்றிவிடலாமா என்று யோசித்தான். தன் உயிருக்கு பகவதியினால் ஆபத்து விளையப் போகிறது என முடிவு செய்து கொண்டான்.

பகவதி, அம்பலத்தின் ஏற்பாடாக இருக்க வேண்டும்— அல்லது. தன்னை ஒழித்து விடக் கங்கணம் கட்டி வந்திருக்கும் பாதகனாக இருக்க வேண்டும். இதயத்திலே புயல் தாக்கிற்று. இன்னும் ஒரு விநாடி தாமதித்தாலும் இறப்பது நிச்சயம்—இதை நினைத்தான் துரை. நினைவின் இடையிலேயே தரையில் கிடந்த கத்தியின் மீது பாய்ந்தான். அதைத் தன் கையிலே எடுத்துக் கொண்டு பகவதியின் முன்பு வீராவேசமாக நின்றான்.

பகவதியோ அசட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, “இப்போது என்னை என்ன செய்வதாக உத்தேசம்?” என்று கேட்டான.

“என்னைக் கொல்ல வந்த உன்னை, இறப்புலகம் அனுப்பப் போகிறேன்”

“அப்படியா? அவ்வளவு பெரிய புலியா? எங்கே— கத்தி என் நெஞ்சிலே பாயட்டும் பார்ப்போம்!” என்று பகவதி ஆவேசமாகக் கூறிவிட்டு நின்றான். துரையும் கத்தியை ஓங்கியபடி அசையாது நின்றான்.

“உம்—நடக்கட்டும். ஏன் தாமதம்?” என்று கேட்டபடி, பகவதி தன் தாடி மீசைகளை அகற்றினான். உடனே துரை கத்தியைக் கீழே போட்டுவிட்டு, பகவதியைக் கட்டிக் கொண்டான். “கண்ணே— **பரிமளா**!” என்று எத்தனை முறை சொன்னானோ தெரியாது.

ஆனால் அத்தனை முறையும் அவளிடமிருந்து முத்தங்களைப் பிரதிபலனாகப் பெற்றான். தூங்கும்போது கன்னத்தை ஈரமாக்கியது யார் என்றும் தெரிந்து விட்டது அவனுக்கு!

தாங்கள் சிக்கியிருக்கிற இடம்—எதிர்பார்த்து நிற்கிற ஆபத்துக்கள் —இவைகளையெல்லாம் சில நிமிஷ நேரம் மறந்தார்கள். மீண்டும் நினைவுகள் படிந்த உலகிற்குத் திரும்பி வந்தார்கள்.

அம்பலமும், ஆட்களும் வந்து விட்ட ஒலி கேட்டது. இருவரும் தனித்தனியே பிரிந்து, ஜன்னலைத் திறந்து விட்டு, ஆளுக்கொரு மூலையிலே தூங்குவதுபோல படுத்துக் கொண்டார்கள்.

அம்பலம் டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தார். இருவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். பகவதி வேடத்திலேயிருக்கும் பரிமளா மட்டும் தூக்கம் கெட்டுவிட்டது போல விழித்துப் பார்த்தாள். அம்பலம் ஜன்னலண்டை நின்று ஜாடையாக அழைத்தார். பகவதியும்

அவரிடம் வந்தான். அவன் அம்பலத்தை பார்த்து, "என்ன சாயபு சொன்னது சரிதானா?" என்று கேட்டான்.

"ரொம்ப சரி! ரொம்ப சரி! ஆமா சாயபு! நீ இந்த துரையை விட்டுடக்கூடாது! ஏன்னா, இவனுகிட்டயும் ஏதாவது விஷயம் இருக்கும். என்னா, ஏதாவது முயற்சி பண்ணினியா?"

"பண்ணிகிட்டுத்தான் இருக்கேன். புதையல் கிடைச்சாலும், அதை வச்சு நிர்வகிக்கிற ரகசியம் இவனுகிட்டத்தான் இருக்குதுன்னு பகவதி சொல்றா! இவன், சாமான்ய ஆளில்லே. நிஜத்தை கக்க மாட்டேங்கிறான். நாலு நாளைக்குள்ளே எப்படியும் இவனுகிட்ட இருக்கிற ரகசியத்தை சாயபு வாங்கித்தர்ரான். அய்யா, நம்பளை மறந்திடக் கூடாது. ஒரு பழைய துணி—பழைய சோலே—வேட்டி......"

"ஏய் சாயபு! அதெல்லாம் நிறையத் தர்ரேன். நீ காரியத்தை ஜெயமா முடி!"

இதைச் சொல்லிவிட்டு அம்பலம் அதை விட்டு நகர்ந்தார். துரை, பரிமளாவை நெருங்கினான். அவள், மீண்டும் ஜன்னல் கதவுகளை சாத்தினாள். அம்பலம், படுக்கையறையிலே சுருண்டுகிடக்கும் மேனகாவின் கன்னத்தைத் தன் முரட்டு விரல்களால் கிள்ளி, அவளை எழுப்பிவிட்டார்.

அவளிடத்திலே, புதையல் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டு விட்டதைக் கூறி மகிழ்ந்தார். சரியானபடி மாயாண்டிக் கிழவன் சிக்கிக் கொண்டான். துரையிடம் புதையல் சம்பந்தமாக மிச்சமிருக்கிற ரகசியங்களையும் குடுகுடுப்பை பகவதி கிரகித்துக் கொடுத்து விடுவான். புதையல் அகப்பட்டதும், மாயாண்டி தான் முதல் பலி! இரண்டாவது பலி, துரை! மூன்றாவது பலி, மலையாள பகவதி!

இவர்கள் மூவரையும் உயிரோடு விடக்கூடாது! ஏனென்றால் இவர்கள் மூவருக்கும் புதையல் பற்றிய ரகசியங்கள் தெரியும். நம்மைக் காட்டிக் கொடுத்து விடுவார்கள். நல்லவேளை, அந்தப் பயல் துக்காராமை சிறையில் பூட்டி விட்டார்கள். ஒருவேளை அவன் விடுதலையாகி வந்தாலும் அவனையும் விடக்கூடாது! எப்படியும் நாலு கொலை தவிர்க்க முடியாததாகி விட்டது!

அம்பலத்தின் பயங்கரமான திட்டங்களைக் கேட்பதற்கே மேனகா பயந்தாள். "நாலு உயிர்களைப் போக்கி விட்டு, நாம் மட்டும் வாழ வேண்டுமா? இப்படி ஒரு பயங்கர ஆசை ஏற்படுவது நியாயமா? தேன் எடுப்பதற்காக ஆயிரக் கணக்கான தேன் பூச்சிகளைக் கொல்லுவார்கள். நீங்களோ, புதையல் எடுப்பதற்காக மனிதர்களைப் பிணமாக்குகிறேன் என்கிறீர்கள்! அந்த மனிதப் பூச்சிகள் உங்களுக்கு என்ன தீங்கு செய்தன?"—இப்படியெல்லாம் கேட்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு! ஆனால் கேட்கவில்லை! கேட்டால் அவளும் அந்தப் பிண வரிசையிலே இடம் பெற நேரிட்டாலும் அதில் ஆச்சரியமில்லை! மேனகா, மௌனம் புழுங்கியவாறு அம்பலத்தின் அகன்ற மார்பிலே சாய்ந்திருந்தாள். கரடு முரடான மலைப்பாறையிலே தாமரை மலர் ஒன்று கிடப்பதுபோல காட்சியளித்தது அவள் முகம். அறையிலே பூட்டப்பட்டிருக்கும் துரையின் அழகான மேனியை நினைவுக் கரங்களால் தழுவியபடி, அவள் அம்பலத்தின் மீது சாய்ந்து கிடந்தாள். அவளது கண்ணீரை, ஆனந்தக் கண்ணீராக எண்ணிக் கொண்டு, தனது 'நீக்ரோ உதடு'களால் அவளது கன்னத்தைத் தடவிக் கொடுத்தார், அம்பலம்!

"நாளைக்குப் பொழுது விடிந்தால், என்னென்ன நடக்குமோ?" என்ற எண்ணங்களை மேயவிட்டுக்கொண்டு, அம்பலத்து வீட்டுத் திண்ணையிலே காவல்காரர்கள் புடைசூழ படுத்திருந்தார் மாயாண்டி! பொழுது விடிந்தது. தகட்டுச் சுருளிலே குறிப்பிட்டிருந்த திசை நோக்கி, அம்பலமும், மாயாண்டியும் சென்றார்கள். அந்தக் குறிப்பு, அவர்களை அங்குள்ள பள்ளிக் கூடத்து வாசலிலே கொண்டு போய் நிறுத்தியது. தகட்டிலே குறிப்பிட்ட இடத்தை கோடு போட்டுக் குறித்துக் கொண்டார்கள்.

"இங்கே வெட்டினால், ஊராருக்குத் தெரிந்துவிடுமே" என்று அம்பலம் சந்தேகப் பட்டார்.

"பள்ளிக்கூடத்தின் தண்ணீர் வசதிக்காக கிணறு வெட்டப் போகிறோம்—என்று சொல்லி விட்டு, நமது காரியத்தை முடித்துக் கொள்ளலாம்" என்று மாயாண்டி யோசனை கூறினார்.

'பேஷான யோசனை! அப்படியே செய்வோம்!" என்று அம்பலமும் தலையசைத்தார்.

'பள்ளி மாணவர்களுக்காக, அம்பலம் கிணறு வெட்டப் போகிறார் தர்ம காரியத்தில் ஈடுபட்டு விட்டார்' என்று ஊரார் பேச ஆரம்பித்தனர். ஆட்கள் கூடினர் அகலமும், ஆழமுமான கிணறு தோண்டப்பட்டது. ஒரே நாளில் கிணறு! மறுநாள் கல்வைத்துக் கட்ட ஆரம்பிக்க வேண்டும். தோண்டத் தோண்ட தண்ணீர் ஊறுகிறதே தவிர, புதையலுக்கு அடையாளம் எதுவுமில்லையே என்று அம்பலம் அங்கலாய்த்துக் கொண்டார். "இன்று இதோடு இருக்கட்டும் இரவு வருவோம். யாருக்கும் தெரியாமல் பரிசோதனை செய்வோம்" என்று மாயாண்டி ஆலோசனை வழங்கினார். ஊர்மக்கள் எல்லாம் படைதிரண்டு வந்து, தர்ம காரியமாக வெட்டப்படும் கிணற்றைப் பார்த்து மகிழ்ந்தார்கள். அம்பலத்தின் கைங்கர்யத்தையும் பாராட்டினார்கள். அம்பலமும், மாயாண்டியும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு ஜாடையாக சிரித்தனர். அந்த சிரிப்பின் அர்த்தம், ஊர் மக்களுக்கு எப்படித் தெரியும்?

இரவு எப்போது வரும் என்று காத்திருந்த அம்பலம், மாயாண்டியுடன் பள்ளிக் கூடப் பக்கம் புறப்பட்டார். அவர் எப்போது வீட்டைவிட்டு வெளியே போவார் என்று எதிர்பார்த்திருந்த மேனகாவும், துரையிருக்கும் அறையின் ஜன்னலண்டை வந்து சேர்ந்தாள். துரை, மேனகாவை வரவேற்றான். அது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. கடுகடுப்பாக இருக்கும் அவனது முகம் மாறியிருப்பதை மேனகா உணர்ந்து மகிழ்ந்தாள். தான் ஜெயித்து விட்டதாகக் கருதி கர்வமடைந்தாள். அப்போது மலையாள பகவதியும் ஜன்னலண்டை வந்து சேர்ந்தான், "நல்லகாலம் பிறக்குது!" என்று கூவியபடி!

"சின்னம்மா! நீ ஜெயிச்சுட்டே! சாயபு வாக்கு பலிச்சுது! அய்யாவுக்கு உன் மேலே இஷ்டம் வந்தாச்சு! சாயபு விடுவானா அய்யாவை!" என்று அளந்தான் பகவதி.

மேனகா, "உண்மையாகவா?" என்று கேட்டாள்

துரை, "ஆமாம்" என்று தலையசைத்தான். மேனகாவுக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை.

"இன்றிரவே நாமிருவரும் வெளியேறி விடுவோமா?" என்று கேட்டாள்.

"நிச்சயமாக — என்னையும் சேர்த்து அழைச்சிகிட்டுப் போங்க சின்னம்மா உங்க குழந்தை குட்டிகளுக்கு புண்யமுண்டு!' என்று கெஞ்சும் தோரணையில் பேசினான், பகவதி வேடப் பரிமளா!

"ஆகா, என் வாழ்வில் புதிய திருப்பம் வந்தது! பூரிப்பு வந்தது! விடுதலை. விடுதலை! மலையாள பகவதி, நீ வாழ்க! இருங்கள்; அவர் வரட்டும்; அவரிடமிருந்து சாவியைக் கைப்பற்றி, நாமெல்லாம் ஓடி விடுவோம். நானும் பயணத்திற்கானவைகளைத் தயார் செய்கிறேன். ஏராளமான நகை நட்டு பணமெல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் எடுத்து இப்போதே மறைத்து வைக்கிறேன்" என்று தாங்காத சந்தோஷத்தோடு கூறி விட்டு, மேனகா குதித்துக் கொண்டு ஓடினாள் இங்கு பரிமளாவின் கன்னம் ஈரமானது!

[வளரும்]

எமது மகத்தான ஆரம்ப விழா!
வேலூர்
முள்ளிப்பாளையம் தியேட்டரில்
7-10-55 வெள்ளி முதல் தினசரி இரவு 10 மணிக்கு
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
நாடக மன்றத்தார் நடிக்கும்
மணிமகுடம்
(கதை, வசனம்: மு. கருணாநிதி)
தமிழகத்து நாடக மேடையிலே புதியதோர் திருப்பம்!
கொள்கை விளக்கும் ஓவியம்!! கொஞ்சு தமிழ்க் காவியம்!!
முற்றிலும் புதிய அமைப்பு! உணர்ச்சி மயமான சம்பவங்கள்!!
உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சிகள்!!!
சேற்றிலும் செந்தாமரை—சிப்பியிலும் முத்து!
அதோ, சிம்மாசனத்திலே சீர்திருத்தவாதி!
கட்டணம்:
ரூ. 2-8-0, 1-8-0, 0-12-0, அணா 6
பெண்கள்: தரை அணா 4.
குறிப்பு: பிரதி ஞாயிற்றுக் கிழமையிலும் மாலை 6-30 மணிக்கு நடைபெறும். திங்கள்தோறும் விடுமுறை.

வெட்கம்! வெட்கம்!!

உமையாள்புரம்
19-9-55

...ரியர் அவர்களுக்கு,

...சிய ஜோதி, அணையா ...க்கு, மாசிலா மணியாம் நேரு ...க்கு வாய் போகிறார்! ...நாட்டு ஏழை மக்களை கவனிக் ...த நேரு சன்மானம் தந்து வருகி ... வெளிநாடுகளில். வேதனை ...ப் போக்க, சாதனைகள் கண்டு ...க்கும் வெளிநாட்டில் ...தனை புரிந்திருக்கிறார் நேரு! ...ங்கே வாதனை பட்டு வாடும் ...ன்னாட்டு மக்களையும் பார்க்க ...ருகிறார்! ஏழையின் துய ...ப் போக்க இந் நாட்டிற்கு ...ள் வரவில்லை: ஏழையின் ...சைகளை அப்புறப்படுத்தி ...த அழகாக அமைந்த கட்ட ...களை கண்டுகளிக்க வருகிறார் ...டித நேரு! ஆலைகள் அதிகம் ...வர் பிறந்த நாட்டில்! மாலைகள் ...திகம் அவருக்கு தென்னாட்டில்!

...மோதிலால் மைந்தர் தென்னாட் ...ல் அடி எடுத்து வைக்கப் போகி ...ர் என்று தேசியத் தோழர்கள் ...ப்பு அடைந்திருப்பார்கள்! ...ல்...மறு நிமிடம் மதுரையை ...த்து மனம் புழுங்கியிருப்பார் ...! மதுரைக்கு நேரு வந்த ...ழுது சாலை ஓரங்களில் இருந்த ...சைகளையும். கட்ட கந்தை ...றி, உண்ண உணவின்றி, ...டிய வயிறு—உலர்ந்த உதடுக ...ன் காட்சியளித்த ஏழை ...களை, நாயினும் கேடாய், வாய் ...ந்து திரியும் பேய் கூட்டம் ...ட்டிவிட்டது! திருச்சியிலிருந்து ...ம் செல்லும் சாலைகளில் இரு ...களில் உள்ள குடிசைகளை ...புறப்படுத்தி விட்டார்கள்! ...புறப்படுத்தப்பட்ட சாலைகளை ...டிசைகளை) புதுப்பிக்க பண ...தவிதான் செய்தார்களா? ...வும் இல்லை. ஏழைகள் வயிற் ...ல் அடிக்கத்தான் இந்த எத்தர் ...் நிறைந்த சர்க்கார் இருக்கி ...த ஒழிய, ஏழைகளைக் காப் ...ற தகுதியான, திறமையான ...்க்கார் இல்லை. இங்கு வாழும் ...்கள் படும் அவதியை நேரு ...ம் சொல்ல வெட்கப் படுகி ... இந்த சர்க்கார். குடிசையைப் ...க்கி, கோபுரத்தைக் காட்டி, ...னத்தால் பிணத்தை மூடி, பாகு ...ழிபேசி பண்டிதரிடம் காட் ...ர்கள். நாற்றம் அடிக்கும் ...க்கடையை மூடி நல்லதோர் ...தை நம் நாட்டில் இருக்கிறது ...று "நான்சென்ஸ்" என்று ...டிய அலகாபாத் விரரிடம் ...ட்டுகிறார்கள்! வெட்கம்! ...ட்கம்!!

அன்பன்,
உ. வே. ராமசாமி.
தி. மு. க. செயலாளர், முசிறி.

★

வழ்புர் வழக்கு!

திருப்பரங்குன்றம்,
23—9—55

ஆசிரியர் அவர்களுக்கு,

12—6—55-ல் திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து நமது கழகக் கொடியை அவ்வூர் சந்திராபாளையத்தில் ஏற்றப் போகும்பொழுது, சில காங்கிரஸ் இளைஞர்கள் சேர்ந்து நமது கழகத் தோழர்களைத் தாக்கியும், கொடியை ஏற்றவிடாமல் தடுத்தும், அதன்பொருட்டு எற்பட்ட சச்சரவில் நமது கழகத் தோழர் வெ. மாரிமுத்து என்பவரின் மீது இ. பி. கோ. 326-வது விதிப்படி வழக்கும் தொடர்ந்து விட்டார்கள். அவ்வழக்கில் நீதிமன்றம் நேர்மையாக விசாரித்து வழக்கை 21—9—55-ம் தேதி தள்ளுபடி செய்துவிட்டது.

வழக்கிற்கு தி. மு. க. சார்பில் வழக்கறிஞர் பி. எஸ். இராம சுப்பிரமணியம் வாதாடினார்.

இப்படிக்கு,
எஸ். இராமன்,
துணைச் செயலாளர், தி. மு. க.

சந்திப்பு...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

யத்தில் நல்ல ரஸ்தாக்கள்கூடக் கிடையாது" என்று குறை கூறுகிறீர்கள். உங்கள் நாட்டில் லட்சக் கணக்கான படித்த இளைஞர்கள் வேலையின்றிப் பரிதவிக்க, வறுமையால் மக்கள் வாட, அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்க உங்களுக்கு நேரமில்லை. உலக வீதிகளில் உல்லாச பவனி வருகிறீர்கள். காஷ்மீரப் பிரச்சினை தீரவில்லை; கொரியாவில் சமாதானம் பேசுகிறீர்கள்! கோவா, இந்தியாவுடன் இணையவில்லை; பார்மோசா கம்யூனிஸ்ட் சீனுவில் சேர வீர முழக்கம் செய்கிறீர்கள். உள்நாட்டிலே அமைதியில்லை; நாகர்கள் நாக நாடு கேட்கிறார்கள், சிக்கியர்கள் தனி நாடு கேட்கிறார்கள், திராவிடர்கள் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று வீர முழக்கம் செய்கிறார்கள். சொந்த நாட்டில் அமைதி ஏற்படுத்த வழியில்லை; உலக அமைதி பற்றி உரத்துக் கூவுவது சுய விளம்பரம் தானே! நேருஜி, உங்களுக்கு வேண்டியதும் புகழ்! புகழ்!! புகழ்!!!

நேரு: இதென்ன பிரமாதம், சிக்கியர்களைச் சீக்கிரமே சரிப்படுத்தி விடுவேன். நாகர்களை அடக்க நாலு குண்டுகள் போதும். ஆனால் தெற்கே இந்தத் திராவிடர்களுடைய தொல்லை தான்.........!

அல: நன்றாகக் கவனியுங்கள் நேருஜி. "அலக்ஸாண்டருக்குப் பின் அவனுடைய ராஜ்யம் சிதறுண்டு போனது" என்று எழுதியிருக்கிறீர்கள். உங்களுடைய சாம்ராஜ்யத்திற்கும் அதே கதிதான் என்பதை மறந்து விடாதீர்கள். தென்னாட்டுக்குச் சுற்றுப் பயணம் போகிறீர்களே, திராவிடர் தலைவர்கள் பெரியார், அண்ணா முதலானவர்களைச் சந்தித்து......

நேரு: இது விஷயத்தில் உம்முடைய யோசனை எனக்குத் தேவையில்லை!

அல: பரவாயில்லை; என் சரித்திரத்தைக் கேவலமாக விமர்சனம் செய்த நீங்கள், உங்களுடைய கடந்தகாலச் சரித்திரத்தைச் சற்று திரும்பிப்பார்க்கவேண்டும். 'புகழ்பெற்ற வெற்றி வீரன் — ஆனால் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்ட இளைஞன்' என்பது என்னைப் பற்றி நீங்கள் அளித்துள்ள தீர்ப்பு. 'புகழ் படைத்த வீரர் — ஆனால் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்ட முதியவர்' என்ற தீர்ப்பைத்தான் உலக வரலாறு உங்களுக்கு அளிக்கப் போகிறது. மறந்துவிடாதீர்கள்! நான் வருகிறேன் நேருஜி.

நேரு: பொறுங்கள், பொறுங்கள்! என் விமானத்திலேயே நீங்கள் போகலாம்.

அல: அடேயப்பா, பயமாக வல்லவா இருக்கிறது சீனப் பிரதிநிதிகளை பாண்டுங் மாநாட்டுக்கு ஏற்றிச்சென்ற 'காஷ்மீர் இளவரசி'யின் கதி ஏற்பட்டுவிடப் போகிறது. என் குதிரை பூசிபாலஸ் எனக்காக வெளியே காத்துக் கொண்டிருக்கிறது. நமஸ்தே!

[உருவம் எழுந்து காற்றில் கலந்து மறைகிறது. நேரு திக்பிரமை பிடித்தபடியே உருவம் சென்ற திக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.]

★

"என்ன, பால் ஆறிவிட்டது, தூங்கிக்கொண்டிருக்கிறீர்களே!"

மனைவியின் அன்புக் குரல் கேட்டு எழுந்தேன். ஆறிய பால், கோப்பையில் 'ஜில்'லென்றிருந்தது. மேஜையின்மேல் பண்டித நேரு எழுதிய 'உலக சரித்திரம்' விரிந்து கிடந்தது. அதிலுள்ள, "புகழ்பெற்ற வெற்றி வீரன் — ஆனால் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்ட இளைஞன்" என்ற அத்தியாயத்தைப் படித்துக் கொண்டிருந்தது அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது!

ஹூம், எல்லாம் வெறுங் கனவு!

★



அந்தமான்
21-9-55

ஆசிரியர் அவர்களுக்கு,

இந்திய ஆட்சிக்குள்பட்ட அந்தமான் தீவில் தமிழர்களாகிய நாங்கள், வாழ்கிறோம் என்று சொல்வதைவிட 'வதைகிறோம்' என்றுதான் சொல்ல வேண்டும். தாய்நாடான தமிழ் நாட்டிலிருந்து, வறுமை என்னும் நோயாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், புண்பட்ட இதயத்தோடும் தான் சென்றோம். ஆனால் இன்னும் ஆறாத புண்ணோடுதான் அலைகின்றோம், அந்தமான் தீவில்! நாங்கள் வேலை கிடைக்காமல்தான் அலைகிறோம். எங்களைவிட கவர்மெண்ட் வேலைகளில் சேர்ந்திருப்பவர்களின் பரிதாப நிலைதான் அதிகம். அவர்களைக் காரணமின்றி வேலையைவிட்டு நீக்கி விடுகிறார்கள். என்ன செய்வது? யாரைத்தான் கேட்பது? வாய்விட்டு அழாமல் மனதுக்குள்ளேயே அழ வேண்டிய நிலைமையாய் இருக்கிறது.

எங்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஏதாவது வேலை வேண்டுமென்று ஆபீசரிடம் போய் கேட்டால், "நீங்கள் எல்லோரும் சென்னையில் கை வண்டி இழுப்பதுதானே; இங்கு ஏன் வந்தீர்கள்?" என்று பதில் சொல்லுகிறார்கள். இந்த இழிவான நிலையில் வேலை இல்லாமல் திரிகிறார்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து தமிழர்கள்! இப்படிப்பட்ட தமிழர்களின் நிலையை சிந்திக்காமலும், எண்ணிப் பார்க்காமலும், 'நாங்கள்தான் தமிழர்களுக்கு தலைவர்கள்' என்று வக்காளத்து பேரம் பேசி திரிகிறார்கள் சிலர். அவர்களுக்கு தூய்மையான தன்மான உணர்ச்சி இருக்குமானால் அந்தமான் தீவில் அவதிப்படும் தமிழர்களைப் பற்றி சிந்திக்கட்டும். அதோடு சென்னை சர்க்காரும் இதில் கவனம் வைக்க வேண்டும். காரணம் இன்றி கூலி வேலை செய்வதற்காக அந்தமானுக்கு வரும் தமிழர்களை தடை செய்ய வேண்டும்.

இப்படிக்கு,
ஜீவன்.

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

பவனி வரும் பண்டிதரே, கேளும் !

— கி. மனோகரன் —

மக்களுக் கென் றேராட்சி, மக்களாலே!
மக்கள் நலம்; அதுவொன்றே குறிக்கோள் என்றீர்.
மக்களென்ன மந்தைகளா? யில்லை, வாழ்வு
மலர்த் தோட்டக் காவலர்கள்! நாட்டின்போக்கை
தக்க நிலை, வெற்றி நிலை நோக்கி ஆக்கும்
திறங் கொண்டோர்! நாட்டிற்கோர் திருப்புமையம்!
பக்க பலம், மூலபலம்! ஆளுங் கூட்டம்
பண்பொழித்தால் அவரேதான் சுழற்சி வெள்ளம்!

காட்டுத் தீ! ஒருநாட்டின் மக்கள் ஆட்சிக்
கூட்டத்தார், நாட்டவரை வேட்டையாடில்!
மீட்டுகின்ற நல்வீணை, அவரே! கொற்றம்
மாட்சியினைத் துணைகோடின், வாழ்வளித்தால்!
ஊட்டுகின்ற தாய்மக்கள், உறுமும் சீயம்!
உதவுகின்ற தந்தையவர் உலுக்கும் வேழம்!
நாட்டவரே ஒருநாட்டின் சக்தி! வாழ்வு!
நாடொப்பும் சேதியினை தந்தீர் அந்நாள்!

பஞ்சாபில் செங்குருதி, வங்காளத்தில்
பஞ்சைகளின் பிணநாற்றம், பீகார், தில்லி,
அஞ்சாதார், வெஞ்சமரில் சிங்கக் கூட்டம்
ஆர்த் தெழுந்த திருநாட்டில் குருதி ஏரி!
நெஞ்சத்தை நெக்குருக வைக்கும் கோர
நிட்டூரம்! படுகொலைகள், கொள்ளை! ஏடா
மிஞ்சிற்று உன்ஆற்றல்? எனக்கேட்டார் காண்
மிஞ்சவில்லை, வெளி நாட்டான் மீளவில்லை!

வந்ததடா நம்மவரின் வெற்றிக் கொற்றம்!
வறுமையிலை! துன்பமிலை, இல்லை சாவு.
சொந்தமடா நல் வாழ்வு, கண்ணீரில்லை!
சருகொத்த வுதடுகளில் சிரிப்பு வெள்ளம்!
எந்தனது பூக்காடு ஏற்றக் குன்றில்!
எனக் கென்றேர் தனிவாழ்வு, சட்டம், திட்டம்.
பந்தமிலா அரசியலின் பொறுப்பு தாரி!
பண்ணிசைக்கும் பைங்கிளிநான், பஞ்சை சொன்னுன்.

சொல்லியவாய் மூடவில்லை, கண்கள் மூடிக்
கொண்டனவே, துப்பாக்கி வேட்டுச் சத்தம்!
மெல்லியலாள் தாலியறுந் தொழிந்த திங்கே!
மையில்லை கண்களிலே, கண்ணீர் வெள்ளம்!
கல்லியெறிந் தொழித்திட்டீர் ஏழை வாழ்வைக்
கரமிழந்தோர், காலற்றேர், தொகை ஏராளம்!
சொல்லிஎன்ன பலன்; இங்கே உரிமைஎண்ணச்
சோலையிலே பூத்த மலர்! கருக வைத்தீர்!

திரு நாட்டில் பவனிவரும் பண்டிதரே கேளும்
துணைக்கண்ட பிரதமர்நிலை பெற்றவரே வாழி!
திரு நாடு, 'திராவிடம்'எம் முந்தையர்தம் மண்ணும்!
பெருவாழ்வு வாழ்ந்தவர்தம் பரம்பரையில் வந்தோம்.
ஒரு காலம்! கடல்கிழித்து வாணிபங்கள் கொண்டோம்!
ஒரு காலம் இமயமலை உச்சியிலே கொடிகள்!
ஒரு காலம், இதுநாள்நாம் கடல்கிழித்தோம், வெந்தோம்!
ஒரு காலம், பஞ்சைகளாய்க் கூலிக்குச் செத்தோம்!

உலக நிலை கண்டவரே, உத்தமரே, உரிமை
உவப்பு நிலை பெற்றவரே, திருநாட்டைக் காணீர்.
கலக நிலை, உலகமதில் மூண்டதற்குக் கண்ட
காரணத்தைச் சொல்லி, நிலைமாற்றிடற்குத் தந்தீர்
பலநாடு ஏத்திமகிழ் "பஞ்சநிலை"க் கொள்கை!
பார்த்திபரே! பாரதத்தின் சுடரொளியே இங்கே
உலகநிலை உய்யகலை, பண்புநிலை பெய்தோர்
இருள் நிலையில்! உண்ணவழி உய்யவழி காணேம்!

வாழ்ந்தமொழி சாக, இவண் வந்தமொழி வாழல்
வாழ்ந்தயினம் வீழ இவண் வந்தயினம் ஆளல்
சூழ்ந்தகடல், ஆழ்ந்தவளம், சூதுநிலை யற்றேர்
சூழ்ந்ததிரு நாட்டவர்கள் சூழ்ச்சியிலே சாதல்!
ஆழ்ந்தகருத் தெனும்பொய்யால் "இந்தியா" என்றேதி
ஆண்டாண்டாய்த் திராவிடத்தை அடிமைநிலை கோடல்!
வீழ்ந்தஇனம் — வீரர்குலம், விழித்து விட்டதிங்கே.
வீழ்ச்சியில்லை. திராவிடத்தைப் பெற்றபின்தான் ஓய்வு!

பொருத்திப் பாருங்கள் !

"சென்ற வாரம் இந்திய இராணுவத்தினர் நாகர்கள் தலைமறைவாயிருக்கும் குகைகளுக்கும், புதர்களுக்கும் சென்று துப்பாக்கி வேட்டையாடி நாற்பது நாகர்களைக் கொன்றனர்."

★

"நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சியை அடக்குவ வற்கு ஏற்கனவே இந்திய அரசாங்கம் அனுப்பிவைத்த இராணுவம் போதாதென்று, இப்போது அஸ்ஸாமில் ஆயுதம் தரித்த போலீஸ் படையொன்றைத் திரட்டி வருகிறது."

★ ★

"கோவாவிலே அமைதியாக சத்யாக்கிரகம் செய்து நுழைந்த இருபத்தி எட்டு பேர்களை போர்ச்சுகீசியர் மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றனர். இது சர்வதேசச் சட்டத்துக்கு எப்படி ஒத்துவரும்?—என்பதாக நேரு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்."

★

"மொராக்கோவிலே ஏற்பட்ட கொந்தளிப்பில் ஆயிரம் பேர் மடிந்ததற்கு இந்திய அரசாங்கம் தன்னுடைய மதிப்பைத் தெரிவித்துக் கொள்கிறது."

— அனைத்துமே பத்திரிகைச் செய்திகள்தான்!

மொராக்கோவிலே விடுதலைக் கனல்மீது பிரெஞ்சு ஆதிக்கம் புனல் சொரியும்போது கண்ணீர் வடிக்கிறார். கோவாவிலே சுதந்திரம் தேடிகள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்காக அகில உலகச் சட்டத்தைப் புரட்டுகிறார்.

அதே நேருதான் கரேனியர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு, மலாய் நாட்டிலே கம்யூனிஸ்ட்களை ஒடுக்க டெம்ப்ளர் கையாண்ட காட்டுமிராண்டி வழிகளைக் கையாண்டு பிணமலையைக் குவிக்கிறார்!

வெய்யிலில் உருகி, குளிரில் இறுகும் பனிக் கட்டிக்கும் பண்டிதருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

சென்னை 9-வது வட்ட (ஏழுகிணறு) தி. மு. கழகச் செயலாளரான தோழர் வி. முனுசாமி அவர்கள், ஏழுகிணறு வட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினரை பெருவாரியான வாக்குகளால் தோற்கடித்து, சென்னை கார்ப்பரேஷன் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!

யோசியுங்கள் தோழர்களே; யோசியுங்கள்!

லெனின் கிராட்— புரட்சி(க்கு) வித்திட்டு, புதுயுகத்(து)க்குப் பாதை கண்ட தொழி(லா)ளர் தலைவன் பெயரை (பெரு)மைப்படுத்திக் கொண்டிருக்(கும்) நகரம்!

ஸ்டாலின் கிராட்— ச(மத்)த்துவ தூதுவனின் கீர்த்தி (பா)டும் பட்டிணம்!

(ம)க்களுள் மாணிக்கம்; மனித(குல) மேதை; சாதனை புரிந்(தோ)ன்; சமுதாயத்தில் மூடி(யிரு)க்கும் வேதனை களைந்(தோ)ன்—ஆகியோர் பெயர்களை (வைத்)திருக்கும், பூங்காவுக்கும் (சூட்டு)வார்கள்; நன்றி காட்டு(வார்)கள்.

(ஆ)னால் இங்கே—சோஷலிச (ஆட்சி) வழங்கும் இந்திய நாட்(டி)லே ஊருக்குப் பெயர் வைத்(திருக்)கிறார்கள்; ஊதிப் பெருத்(திருக்)கும் முதலாளியின் (பெ)யரை!

டால்மியாபுரம் — என்று (பெய)ர் ஒரு கிராமத்துக்கு!

டால்மியா யார்? வெள்ளையனின் துப்பாக்கிக்கு மார்பு காட்டி சுதந்தரக் கொடியைச் சாயாமல் காத்து நின்ற குமரனின் சொந்தக்காரனு? ஏகாதிபத்தியத்தின் குரல் வளையை நெறித்தவனு? விடுதலைப் படையின் தளகர்த்தனு? விவேக சிந்தாமணியா?

இல்லை: இல்லை! டால்மியா ஒரு முதலாளி என்பதைத் தவிர, ஊருக்குப் பெயர் சூட்டும் அளவுக்கு தகுதி கொண்டவரல்ல.

முதலாளி என்கிறோமே அப்படியாவது ஒழுங்கான வழியில் பொருள் ஈட்டிய மாசாத்துவனைவாவது வாழ்ந்திருக்கிறாரா?

அதுவும் இல்லை!

அவரை நிர்வாகத் தலைவராகக் கொண்ட பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில், சுமார் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள சர்க்கார் பத்திரங்கள் அவரால் கையாளப்பட்டு நம்பிக்கை மோசடி செய்யப்பட்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட பித்தலாட்டப் பூபதியின் பெயரைத்தான் மானமே பெரிதெனக் கொண்ட மறவர் பூமியின் சிற்றூருக்குச் சூட்டியிருக்கின்றனர்.

பிரமாண்டமான ஆலைகள் நடத்துகிறார். பெரும் பெரும் பத்திரிகைகள் அவர் பெயரில் வெளிவருகின்றன. இப்படியெல்லாம் கண்ணியமெனும் ஆடையோடிருப்பதாகப் பாசாங்கு செய்யும் அவர்தான் கயமைக் காட்டாற்றிலே நீச்சல் பழகியிருக்கிறார்!

மூன்று கோடி ரூபாய் ஜாமீன் பேரில் ஆள் விழுங்கும் முதலை விடுதலை செய்யப்பட்டிருக்கிறாராம்!

பொய்யன்!
புரட்டன்!
எத்துக்காரன்!
இழிசெயல் படைத்தோன்!

—இத்தனைக்கும் உரிமையான ஒரு ஏமாற்றுக்காரன் பணபலத்தால் மட்டுமே ஒரு செந்தமிழ்ச் சிற்றூருக்குத் தன் பெயரைச் சூட்டியிருக்கிறான்.

இது கூடாதென்றால் கேலி செய்கின்றனர் கம்யூனிஸ்ட்கள்; மோடி செய்தன சில காலியான தலைகள்!

அவர்களைத்தான் கேட்க விரும்புகிறோம் — லெனின் கிராட், ஸ்டாலின் கிராட் ஆகியவற்றின் உடபொருள் உணர்ந்தோரே! ஒரு ஊர் கெடுப்பவனின் பெயர்தான் உலகாண்ட இனத்தோரின் சிற்றூருக்கு வழங்கப்பட வேண்டுமா?

மோசடி செய்தவன் பெயருக்கு முக்கியத்துவம் தருவதைத்தான் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறதா?

—யோசியுங்கள் தோழர்களே, யோசியுங்கள்! வடநாட்டு ஆதிக்கத்தின் வீண் பிடிவாதத்தைப் பற்றி யோசியுங்கள்! அவர்களுக்கு வால் பிடிப்போரின் "வரட்டு ஜம்பம்" பற்றி யோசியுங்கள்! மோசடிக்காரனின் பெயரை அழிக்க சிந்தப்பட்ட ரத்தம் எவ்வளவு? தரப்பட்ட உயிர்கள் எத்தனை? யோசியுங்கள்!

★

புகழ் படைத்த புது நூல்கள்!

பன்மொழிப் புலவர்,
கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி., எழுதிய

சரித்திரம் பேசுகிறது	ரூ.	3	0	0
மருதூர் மாணிக்கம்	,,	3	0	0

கவிஞர் கண்ணதாசன் எழுதிய

ஈழத்து ராணி	ரூ.	1	0	0
பெரும்பயணம்	,,	1	0	0
கூட்டுக் குரல்	,,	1	0	0
இலக்கியத்தில் காதல்	,,	1	4	0
புதுமைப் பெண் (ஜீவா)	ரூ.	1	12	0
புது வாழ்வு (அருணன்)	,,	1	8	0
கண்மணி (தென்னரசு)	,,	1	0	0
பொற்கொடி (விகரு. ராமநாதன்)	,,	1	0	0

["அருணோதயம்" சென்னை-14]

சென்னை 29வது வட்ட தி. மு. க. செயலாளரான தோழர் அ. பொ அரசு அவர்கள், நேப்பியர் பார்க் வட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினரை ஏராளமான வாக்குகளால் முறியடித்து, சென்னை கார்ப்பரேஷன் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்!

காங்கேயநெல்லூர்

1-10-55 சனி மாலை 6 மணிக்கு, தோழர் டி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, பகுல், இளஞ்செழியன், கருத்தோவியன்—ஆகியோர் பேசுவர்.

பெருந்துறை

1-10-55 சனி மாலை 7 மணிக்கு, தோழர் ப. கு. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கோவை செழியன்-ஆகியோர் பேசுவர்.

பரங்கிப் பேட்டை

2—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, தெத்துக்கடை வீதியில், தோழர் எம். எம். முஸ்தபா அவர்கள் தலைமையில், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசுவார்.

நொடுங்கையூர்

2—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, மூலக்கடையில், தோழர் மு. ராசன் அவர்கள் தலைமையில், தோழர் கி. மனோகரன், தோழியர் சத்தியவாணிமுத்து-ஆகியோர் பேசுவர்.

மணப்பாறை

2—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, நேரு சதுக்கத்தில், தோழர் மா. இளங்கீரன் அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், காசிநாதன்—ஆகியோர் பேசுவர்.

கோரேகான் (பம்பாய்)

2—10—55 ஞாயிறு காலை 8-30 மணிக்கு, கோரேகான் [பம்பாய்] ஜவஹர் நகரில், தி. மு. கழக கிளை நிறுவப்படும். தோழர் தியாகராசன் தலைமையில், தோழர்கள் பொற்கோ, இளம்வழுதி—மற்றும் பலர் பேசுவர்.

வாழ்த்துகிறோம்

சென்ற 14-9-55 அன்று, நடிகரும் உதவி டைரக்டருமான தோழர் ஜி. எஸ். மகாலிங்கம் அவர்கள், தோழியர் கமலாவை கோவிந்தபுரத்திலுள்ள தனது இல்லத்தில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். மன்றல் விழாவிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர் இராம. அரங்கண்ணல், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், நடிகமணி நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன்—ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க கமலா—மகாலிங்கம்!

திருமணம்

14-9-55 அன்று கொரடாச்சேரி தோழர் எஸ். எம். வைத்திலிங்கம் அவர்கள், தோழியர் செகதாம்பாள் அம்மையை, புலவர் குழந்தைய்யா அவர்கள் தலைமையில் தனது வாழ்க்கைத் துணைவியாக எற்றுக்கொண்டார். வாழ்க மணமக்கள்!

பிறப்பு

சென்ற 18-9-55 ஞாயிறன்று, ஏர்வாடி தோழர் அலிசேக் மன்சூர் அவர்களின் துணைவியார் தோழியர் அலியாபாத்து அம்மையார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்கள் — செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

‘அன்பு இல்லம்’

[★]

“அன்பு இல்லம்”

கல் நெஞ்சக்காரர்களுக்கு அன்பரசு என்று பெயர் இருப்பதில்லையா? அதைப்போலத்தான் அந்த மாளிகைக்கு ‘அன்பு இல்லம்’ என்று பெயர்.

ஊரின் எல்லைப் பகுதி — பணக்காரர்களின் தனி உலகம்-கொலுப் பொம்மைகள்போல் வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் அழகு மாளிகைகள்—அதற்கிடையே தான் அந்த ‘அன்பு இல்லம்!’

அந்த மாளிகையைச் சுற்றி அழகான தோட்டமுண்டு; எப்போதும் ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கும் ‘ரேடியோ’ கீதமுண்டு; மக்கள் உண்டு; ஆனால் அவர்களின் இதயத்திலே ‘‘அன்பு’’ உண்டா? சந்தேகம்தான் — ஆனாலும் வீட்டின் முன்னே—‘காம்பவுண்ட்’ சுவற்றிலே—‘அன்பு இல்லம்’என்ற பலகை தொங்கிக் கொண்டுதான் இருக்கிறது!

★

ஒருநாள் மாலை!

இல்லத்து வாசலிலே மகுடி ஓசை கேட்டது! புத்தகம் ஒன்றில் தன் கருத்தை செலுத்திக் கொண்ருந்த அந்த வீட்டுத் தங்கை திடுக்கிட்டது. ஓடிவந்தது வாசலுக்கு. ஒரு சிறுவன்; அவன் கையிலே ஒரு பாம்புப் பெட்டி; ஆமாம்; அவன் ஒரு பாம்பாட்டி!

தங்கையைக் கண்டதும் அவன் சும்மா இருப்பானா? பெட்டியைத் திறந்தான். விடுதலை பெறத் துடிக்கும் கூண்டுக் கிளியைப் போல ‘உஸ்’ என்று சீறி எழுந்தது ஒரு கருநாகம்!

‘ஐயோ’ என்று அலறி விட்டது அந்தப் பாப்பா! பாம்பைக் கண்டதும் பயந்துவிட்டது அது. பாவம், பாம்பினும் கொடியோர் அந்தப் பணக்கார உலகத்திலே கோடி கோடியாக மலிந்து கிடக்கிறார்கள் என்பது அதற்கெப்படித் தெரியும்? அதன் விறிட்ட அலறல் வீட்டுக்குள்ளிருந்த தந்தையை இழுத்து வந்தது வாசலுக்கு!

பாம்பாட்டி மகுடியை ஊத ஆரம்பித்தான். சீறி எழுந்த நாகம் படம் விரித்தது- நடனம் புரிந்தது. தங்கைக்கு ஏக மகிழ்ச்சி! கை கொட்டிச் சிரிக்க ஆரம்பித்தது. அதனுடைய அப்பாவின் கண்களிலும் ஆச்சரியம் தோன்றத்தான் செய்தது. சாதாரண மனிதன்—மனிதன்கூட அல்ல; சிறுவன்—நினைத்த மாத்திரத்தில் உயிரைப் பறிக்கக் கூடிய நாகத்தையே அடக்கி விடுகிறான்; ஆடவும் வைக்கிறான்; என்னே அவன் சாதனை! எத்தனைத் திறமை!-என்ற எண்ணம் அவர் மனதிலே அரும்பியது. ஆனால், மறுகணமே அவரது முகம் மாறியது. பாம்பாட்டி ஏன் இங்கு வந்தான்? ஏன் மகுடி ஊதுகிறான்? எதற்காக பாம்பை ஆட வைத்துக் காட்டுகிறான்? காசுக்காகத்தானே! கடைசியில் இனும் கேட்கத்தானே செய்வான்?—என்ற பயம் அவர் நெஞ்சிலே தோன்றியது.

நினைத்தது வீணாகவில்லை. பாம்பாட்டி அவரைப் பார்த்தான். ‘‘ஐயா, துரை! ஏழைக்கு ஏதாவது கொடுங்கய்யா!’’ என்றான். தரையைத் தொட்டு ‘சலாம்’ செய்தான்.

‘‘ஏதாவது கொடுக்கவா? ஏண்டா, தடிமாடாட்டமா இருக்கியே; ஏதாவது தொழில் செஞ்சு பிழைக்கிறதுதானே!’’—அந்த வீட்டுக்காரர்—‘அன்பு இல்ல’த்தின் சொந்தக்காரர் புத்தி சொன்னார், ‘காசில்லை; போ’ என்பதற்குப் பதிலாக.

பாம்பாட்டிச் சிறுவன் ஒரு மாதிரியாகச் சிரித்தான். ‘‘என்ன’ங்க ஐயா; நான் செய்வது தொழிலாகத் தெரியவில்லையா உங்க கண்ணுக்கு? பாம்பை அடக்குகிறேன் ஐயா; பாம்பை அடக்குகிறேன்! செய்ய முடியுமா யாராலாவது?’’ என்றான். அவன் குறும்புக்காரன்; கிண்டலாகப் பேசினான். ‘பிச்சை எடுக்கப் புறப்பட்டு விட்டோம்— இனி நமக்கு சிரிப்பு ஏன்? களிப்பு எதற்காக?’ என்பதை உணராதவன் அவன். சிறுவன்தானே!

‘‘போனா போகுதப்பா! ஓரணா கொடுத்தனுப்பலாம்’ப்பா’’—என்று சிபார்சு செய்தது. பாம்பின் நடனத்தைக் கண்டு களித்த அவரது மகள்.

கோபம் வந்துவிட்டது அப்பாவுக்கு. அவரே பாம்பாகிவிட்டார்! ‘‘நிர்மலா! நீ போ உள்ளே! இந்த மாதிரி தடிப் பயல்களுக்கு ஓரணா என்ன; காலணாகூட கொடுக்கக் கூடாது. பிச்சை எடுக்க வந்தவனுக்கு திமிரைப் பார் திமிரை!’’—அவர் பேசவில்லை; ‘பணம்’ சீறியது!

பாம்பாட்டிக்கு ரோசம் வந்துவிட்டது. பின்னே என்ன? பாம்பையே அடக்குபவன் அவன்; மனிதருக்கா பயப்படுவான்? ‘‘ஐயா; கொஞ்சம் மரியாதையாக வே பேசுங்கள். நாக்கு நீளுகிற அளவுக்கு கை நீளக் காணோமே!’’ என்றான்.

அவ்வளவுதான்; ‘நீளுகிறது பாரடா, கை!’ என்றார் அவர். பாம்பாட்டியின் மேல் பாய்ந்தார். அவன் சிறுவன் என்பதை மறந்தார். கையை ஓங்கினார். ‘‘அப்பா: வேண்டாம்’ப்பா!’’ என்ற நிர்மலாவின் குரலையும் கேட்கவில்லை. அவனை அடிக்கவும் செய்தார்.

பாம்பாட்டிச் சிறுவனின் கண்கள் சிவந்தன. ஆனாலும் அவன் ஆத்திரப்படவில்லை. பேசாமல் தன் பாம்புப் பெட்டியை எடுத்துக்கொண்டான். நடக்க ஆரம்பித்தான். வாசலுக்கு வந்தான். ‘அன்பு இல்லம்’ என்ற அந்தப் பலகையை கழற்றினான். வேகமாக அந்த மனிதரின் முன்னே வீசி எறிந்தான். ‘ஐயா, முதலில் இந்தப் பெயரை மாற்றுங்கள். நான் வருகிறேன்’ என்று சொன்னான். நடந்தான்.

★

அன்று இரவு-நடுநிசி இருக்கும்!

‘அப்பா! அப்பா!’ என்ற நிர்மலாவின் பயங்கர அலறலைக் கேட்டு கண்விழித்தார் அப்பா. படுக்கையைவிட்டு ‘குபுக்’கென்று எழுந்தார். மின்சார விளக்கை ஏற்றினார்.

மறு கணம்...‘ஐயோ! ஐயோ!’ என்ற அவரது அலறலும் சேர்ந்து எழும்பியது!

ஏன்? அவர்கள் இருவரையும் ஏககாலத்தில்அலறவைத்த நிகழ்ச்சிதான் என்ன? சாதாரண நிகழ்ச்சியல்ல; சாவின் வாசலிலே நின்றுகொண்டிருந்தாள் நிர்மலா! புரியும்படிச் சொல்லவா? நிர்மலாவின் படுக்கையிலே — அவள் காலைச் சுற்றிக்கொண்டு — படமெடுத்து ஆடி நின்றது ஒரு நாகம்!

அவர் கத்தினார். பக்கத்து வீடுகள் நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்தன. சப்தம் கேட்டு எழும்ப—துணைக்கு ஓடிவர—ஒருவரையுமே காணோம்! அதுதான் பணக்கார உலகத்தின் தனி பண்பு!

அப்பாவின் கால்கள் நடுங்கின. கம்பை எடுத்து பாம்பை அடிக்க பயந்தார். கம்பைக் கண்டதும் பாம்பு, ‘பொட்’டென்று நிர்மலாவின் காலில் கடித்துவிட்டால்...? அவர் என்ன செய்வார்? வாசல் கதவைத் திறந்தார். தலைதெறிக்க தெருவுக்கு ஓடிவந்தார்.

‘‘நாதர் முடி மேலிருக்கும்
நல்ல பாம்பே!
நச்சுப் பையை வைத்திருக்கும்
நாகப் பாம்பே!...’’

எங்கிருந்தோ எழும்பியது இந்த சப்தம். நல்ல நிலவு! சுற்றுமுற்றும் பார்த்தார் அப்பா. வீட்டிற்கு எதிர்புறத்தில்—கொஞ்ச தூரத்தில் இருந்த விளையாட்டு மைதானத்தில்—ஒரு ஆலமரத்தடியில் படுத்துக் கொண்டிருந்தான் பாம்பாட்டி! அவன் தான் கவலை மறந்து பாடிக்கொண்டிருந்தான். கேட்பதற்கு ஆளில்லை; தலையசைத்து ‘சபாஷ்’ போட யாருமில்லை! போகட்டுமே; அவனுக்கென்ன கவலை?

அவனைப் பார்த்தார் அப்பா. மறுகணம் அந்த ஆலமரத்தை நோக்கி ஓடினார்.

‘ஐயோ, பாம்பாட்டி! பாம்பாட்டி!’என்ற சப்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டெழுந்தான் அவன்.

எதிரே......கண்ணீர்க் கண்களுடன், நடுங்கும் கைகளுடன், கெஞ்சும் பார்வையுடன் அப்பா! ‘என்ன ஐயா! என்ன?’—பாம்பாட்டி கேட்டான்.

‘தம்பீ; தம்பீ! என் மகளின் படுக்கையிலே பாம்பு தம்பீ! கொஞ்சம் வாயேன். அவள் உயிரைக்காப்பாற்று உனக்குக்கோடி புண்ணியம் உண்டு’—கெஞ்சினார் அவர். சந்தேகம் வேண்டாம்; ‘பிச்சைக்காரப் பயலே’ என்று அதட்டியவர்தான், அன்பாக அழைக்கிறார், ‘தம்பீ’ என்று.

‘என்ன, பாம்பா?’ சற்று பதட்டத்துடன்தான் கேட்டான் பாம்பாட்டி.மறுகணம் ஏதோ யோசித்தான். யோசனைக்கு நேரம் தரும் நிலையில் இல்லை அப்பா. ‘தம்பீ! என் மகளுக்கு உயிர் கொடப்பா! உனக்கு என்செல்வமனைத்தையும் தருகிறேன்...’ என்று அழுதார்.

பாம்பாட்டிச் சிறுவன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. மகுடியை எடுத்தான்;ஒரு காலி பாம்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டான். வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

வீட்டிற்குள் நுழைந்தான், அவன். இப்போது அவனைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. படுக்கையை பார்த்தான். படமெடுத்த பாம்பு — பயந்தபடி நிர்மலா! அவன் அவசரஅவசரமாக மகுடி ஊத ஆரம்பித்தான். நள்ளிரவின் அமைதியிலே இனிய மகுடி ஒலி எழும்பியது. பாம்பு கட்டுப்பட்டது அந்த ஓசையிலே. ‘சரசர’ வென்று மகுடியின்பக்கம் ஊர்ந்து வந்தது. சிறுவன் கப்பென்று பாம்பைப் பிடித்தான். பெட்டிக்குள் அடைத்தான்.

நிர்மலா படுக்கையை விட்டு எழுந்தாள். ‘நிர்மலா’என்று ஆசையுடன் அழைத்துக் கொண்டு அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டார் அப்பா.

‘ஐயா, நான் போகட்டுமா?’—பாம்பாட்டி நகரத் தொடங்கினான்.

‘தம்பீ! எங்கே போகிறாய்? உனக்கு என்ன வேண்டும்? தயவு செய்து கேட்டு வாங்கிப் போ!’—ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுக்கத் தயாராக இருந்தார் அவர்.

‘அவசரச் செலவு இருக்கிறது; எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும்’ என்றான் அவன்.

‘ஐந்தென்ன; இந்தா பத்து!’ என்று சொல்லிக் கொண்டே ஒரு பத்து ரூபாய் நோட்டை அவன் கையில் திணித்தார், அவர். அவருக்கு ஒரே சிரிப்பு -பூரிப்பு!

பாம்பாட்டி வெளியே வந்தான். காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தான். மாலை அவன் வீசி எறிந்து விட்டுப் போனானே, அந்த ‘அன்பு இல்லம்’ என்ற பெயர்ப் பலகை அது! அதை எடுத்தான். சுவற்றில் மீண்டும் மாட்டினான். நடந்து கொண்டேயிருந்தான்.

கொஞ்சதூரம் சென்றிருப்பான். ஏனோ அவனுக்கு சிரிப்பு வந்தது. பாம்புப்பெட்டியைப் பார்த்தான்.

‘‘ஏ, பொல்லாத பாம்பே!
நல்ல காரியம் செய்தாய் கண்ணின் மணியைப்போல் உன்னைக்காத்து வருகிறேன், நான்! என்னையும் ஏமாற்றிவிட்டு ‘விடுதலை’ பெறப் பார்த்தாயே நீ! அதுவும் நல்லதிற்குதான்! இரக்கமற்ற மனித நெஞ்சம் ஒன்றில் ‘அன்பை’ப் புகுத்தினாய்! எனக்கும் பத்து ரூபாய் சம்பாதித்துக் கொடுத்தாய்! ஆனால்...நீ விஷப்பல் பிடுங்கப்பட்ட பாம்பு—உன்னிடம் விஷமில்லை; கடித்தாலும் பயமில்லை என்பது அந்த மனிதருக்குத் தெரிந்திருந்தால்...ஹா...ஹா’’

என்று, சிரித்தான், நடந்துகொண்டேயிருந்தான்.

★

‘‘நாதர் முடி மேலிருக்கும்
நல்ல பாம்பே...’’

ஆலமரத்தடியிலிருந்து எழும்பியது பாம்பாட்டிச் சிறுவனின் குரல். இப்போது அது தேன்போலப் பாய்ந்தது, ‘அன்பு இல்ல’த்தின் சொந்தக்காரரின் காதுகளில்!

—சொர்ணம்

'எழுத்தாணி'

தெட்சணாமூர்த்தி;
தேனாம்பேட்டை.

(?) ஒரு நடிகன் விரும்பும் பாத்திரம் எது?

வற்றாது பணம் கொடுக்கும் 'அட்சய பாத்திரம்'!

பெரி. கணேசன்; காரைக்குடி.

(?) நேரு ரஷ்யாவுக்குச் சென்ற போது, புல்கானினுக்கு மாம்பழம் கொண்டு சென்றார். இப்போது சென்னைக்கு வரும்போது காமராசருக்கு என்ன கொண்டு வருவார்?

காமராசர் சமுத்தில் கட்டுவதற்கான ஒரு 'அடிமை லைசென்ஸ்'!

கோ. சீனிவாசன்; சாட்டுப்பத்தூர்.

(?) நேரு, 'பண்டிதர்' என்ற

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) எம். கே. மணி;
1-4, மவுண்ட் ரோடு
சென்னை-2

பட்டத்தைத் துறந்து விட்டாராமே: ஏன்?

பண்டிதரென்றால் அளந்து பேச வேண்டுமே என்ற காரணமாயிருக்கும்!

வே. நாசராசன்; நெல்லிக்குப்பம்.

(?) வாழ்த்து கூறவந்த காமராசரைச் சந்தித்தபோது, பெரியார் அவரிடம் என்ன பேசியிருப்பார்?

திருவண்ணாமலையில் ஆச்சாரியாரிடம் பேசியதுபோல ஆபத்தான விஷயங்களை நிச்சயம் பேசியிருக்கமாட்டார்!

கோ. சண்ணப்பன்; பேரூர்.

(?) நேரு தமிழ் நாட்டுக்கு வரும்போது கம்யூனிஸ்ட்டுகள் என்ன செய்வார்கள்?

ரஷ்யாவிலிருந்து திரும்பியவர் உடலில் இரத்தத்தைத் தவிர வேறு எந்தப் பகுதியிலாவது சிவப்பேறியிருக்கிறதா என்று சோதனை செய்வார்கள்!

சி.சு.தேவராசன்; சிறுகதையூர்.

(?) கம்பன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?

ஜனசக்தி ஆபீசிலுள்ள மார்க்ஸ் புத்தகத்தின்மீது கறையான் சனை மேயவிட்டுக்கொண்டிருக்கிறான்!

பஷீர் அகமது; மதுரை.

(?) மனித உரிமை என்பது என்ன?

எந்த அரசாலும் ஒடுக்கி ஒழிக்க முடியாத இமயம்!

எம். ஜெகந்நாதன்;
இராக்கியப்பாளையம்.

(?) சுதந்திரத்தின் விலை என்ன?

விடுதலைக்குழந்தைகள் அடிமைப் பலி பீடத்திலே அறுத்துக் கொடுத்த தலைகள்!

ம.குருச்சந்திரன்; திருகோணமலை.

(?) மனிதன் இறந்தவுடன் உயிர் எங்கே போய் தங்குகிறது?

தட்சணைப் பணமாக புரோகிதன் மடியில் தங்குகிறது!

மா. வைரவன்; சத்துவாச்சாரி.

(?) வடவர் ஆதிக்கத்திலிருந்து திராவிடம் விடுதலை பெற வேண்டுமானால் நமக்கு அதிகம் தேவைப் படுபவர்கள் யார்—பேச்சாளர்களா? எழுத்தாளர்களா?

இவர்களோடு இன்னொருவரும் தேவைப்படுகிறார். அவர்தான் செயலாளர்!

(●) எம். கே. மணி; சென்னை-2

(?) ஓய் எழுத்தாணியாரே! வரும் அக்டோபர் மாதம் 2-ம் தேதி உமக்கும் நேருவுக்கும் சந்திப்பு ஏற்படுமா?

இப்போது ஏற்படாது; திராவிட நாட்டுப் பிரிவினைப் 'ஓலை'யில் கையெழுத்துப் போடும்போது தான் 'எழுத்தாணியார்' நேருவைச் சந்திப்பார்!

பஞ்சு ஆறுமுகம்; தஞ்சை.

(?) மனிதன் சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் அடிமையாகிறான்—என்ற கருத்தை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா?

ஆமாம்; இல்லாவிட்டால் பெரிய மனிதர்கள் செய்யும் சிறிய தவறுகளுக்காக நாம் எப்படி சமாதானம் தேடமுடியும்?

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6